உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } சார்வரி - பங்குனி 10—4—61 { இதழ் 5

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

திருவருள் வாய்ப்பு

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள் விரவிய வேதஒலி விண்ணெலாம்வந்து எதிர்ந்திசைப்பச் சிவபெருமான் திருவோலக்கத்தில் எழுந்தருளியிருக்கின்றார் திருக்கயிலையில். அதேபோன்று அரவொலி, ஆகம ஒலி, வேத ஒலி, திருமுறைத் தோத்திர ஒலி விண்ணெலாம் சென்று எதிர்ந்திசைப்பக் கயிலைக் குருமணிகள் திருவோலக்கம் கொண்டு அடியார்களுக்கு அருள் வழங்குகிறார்கள் தருமையம்பதியிலே. அன்று ஒரு விழா, அது தான் பொன் விழா; கனகாபிஷேக விழா. 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' என்பது நமது ஆன்றோர் வாக்கல்லவா? அதேபோலக் குருவுக்கு நிகழ்வது சிவத்துக்கு நிகழ்வதல்லவா?

நமது ஆசாரிய பீடங்களுள் தருமையம்பதிவாழ் குருஞானசம்பந்தர் திருமரபும் திருக்கயிலாய பரம்பரையில் வந்தது. இங்குத் திருமேனிகொண்டு எழுந்தருளும் எல்லாக் குருமூர்த்திகளும் குருஞானசம்பந்தராகவே வீற்றிருப்பவர்கள். அந்த நிலையில் இப்பொழுது 25 ஆவது குருஞானசம்பந்தராக எழுந்தருளியிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 'கயிலைக் குருமகாசந்நிதானம்' என்றே வழங்கப்பட்டு வருபவர்கள். பரம்பரை வந்த வரலாறு விளங்கப் பூலோககைலாய தரிசனம் செய்து மீண்டும் எழுந்தருளி வந்து நமக்கு நல்வழி காட்டிவருபவர்கள். அந்த நல்ல குருமூர்த்திகளுக்குப் பொன்முழுக்கு விழா - கனகாபிஷேக விழா (12—3—1961) சார்வரி - மாசி - இருபத்தொன்பதாம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று பல்லாயிரவர்கூடிக் காண நிகழ்ந்தது. அப்பொழுது எழுந்த ஒலி முழக்கங்கள் மேலே சொல்லியவாறு அரவொலியாய், ஆகம ஒலியாய், தோத்திர ஒலியாய், வேத ஒலியாய் எல்லாமாய் இன்றும் நின்று நிலவிவருகிறது. எழுப்பப் பெறும் உயிரொலிகள் அனைத்தும் உலகிலேயே சுழன்று நிலைப்பதாக விஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள். அதுபோலவே இவ்வொலிகளும்.

ஏதேது செய்தாலும் ஏதேது சிந்தித்திருந்தாலும் எல்லாம் அவனருளிருக்க - உண்ணின்று உதவச் செய்கிறோம். அந்தத் திருவருள் உதவி இல்லாமல் நம் முயற்சிகள் அனைத்தும் பயன் தாரா. செய்தற்கும் இயலாததாக முடியும். இந்த நற்செயலுக்கும் திருவருள் வாய்ப்புக்கள் பல உண்டு. விழா நிகழ்ச்சி முயற்சி இவை விரிப்பதற்கு முன்னே உறுதியளித்த திருவருளை நினைத்தலும் போற்றுதலும் சிறப்பாகும்.

அன்பர்கள் பலர் கூடிக் கயிலைக் குருமகாசந்நிதானத்திற்குக் கனகாபிஷேக வழிபாடு செய்தல்வேண்டும் என்று முடிவுசெய்தார்கள். ஆனால் அதனை ஏற்றருளும் குருமகாசந்நிதானத்தின் அநுமதியும் வேண்டுமே. அன்பர்கள் முடிவு தெரிந்ததும், தமக்குச் சிறப்புக்கள் செய்தலைவிடக் கடவுள் திருமேனிகளுக்குச் சிறப்புக்கள் செய்தலாக இருந்தால் தாமும் அதில் பங்குபற்றிச் சிறப்புக்குச் சிறப்பாகச் செய்வதுபோல்வதாகுமே என்று கயிலைக்

குருமகாசந்நிதானம் திருவுளம்பற்றினர்கள். அன்பர்கள், குரு மூர்த்திகளாக உள்ளவர்களின் ஆணையை மீறியதாகவும் இருத்தல் கூடாது. ஆனல் பலர் சேர்ந்து ஒருமுகமாக எடுத்த நற்செயலை நிறைவேற்ருமல் இருத்தலும் கூடாது, என்று திகைத்தார்கள். இந்தநிலையிலும் கனகாபிஷேகமுயற்சிகள் தீவிரமாகிக்கொண்டே வந்தன. அன்பர்கள் கூடிக்கூடிச் செயல்முறைகளைச் சிந்தித்து வந்தார்கள்.

கயிலைக் குருமூர்த்திகள் செந்திலாண்டவனை வழிபட்டு மீண்டும் தருமைக்கு எழுந்தருளும் வழியில் மதுரைச் சொக்கேசப் பெருமானைத் தரிசனம் செய்து மதுரையைவிட்டுப் புறப்பட்டார் கள். ஊர் எல்லையில் அவர்கள் செல்லும் உந்தூர்தியை முந்திக் கொண்டு வேறெரு உந்து வந்து நின்றது. அதிலிருந்து மதுரைச்சொக்கேசனை முப்போதும் திருமேனிதீண்டும் அருச்சகர் ஒருவர் இறங்கினர். திருவருட்பிரசாதங்களுடன் வந்தார். மகாசந்நிதானத்தின் உந்தூர்தியும் நின்றது. "அருளிப்பாடு" என்ருர். அங்கயற்கண்ணிபங்கன் அருட்பிரசாதங்களை வழங்கி ஞர். அத்தோடு வெண்பொற்காசுகள் பலவற்றையும் சேர்த்து வழங்கினர். "இது எதற்கு" என்றதற்கு, "கனகாபிஷேகக் காணிக்கை" என்ருர். "அது முடிவுபெறவில்லையே" என்று திருவாய் மலர்ந்தார்கள். "இல்லை; முடிவாயிற்று, அது சொக்கன் திருவுளம்" என்று மறுமொழி வந்தது. "அதுவே அவனது ஆணையாக இருந்தாலும் காசுகள் எதற்கு?" என்று திருவுளம் கொண்டார்கள். "அது என்செயலால் அல்ல, அவன் அருள்வழி வருவது" என்று கூறியவாறு அருளையும் பொருளை யும் சேர்த்து ஏற்றுக்கொள்ள மீண்டும் அளித்து விடைபெற்ருர் அந்தவேதியர். அதுவே திருவருளாணையாகப் பெருமான் திருவுளப் பிரசாதமாக அமைந்தது. கயிலைக் குருமணிகள் அங்கேயே இறைவன் புகழ்பாடித் தோத்திரித்துத் திருவுளம் கனியத் திருக்கோயில் இருக்கும் திசைநோக்கித் தொழுதுநின் றனர். பிறகு அதுவே உறுதியாகக் கனகாபிஷேகத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்ற முடிவும் ஏற்பட்டது. நிகழ்ச்சி குறித்து முடிவு செய்ய விழாக் குழுவினர் கூடியபோது, எங்கோ செல்வ தற்கு வந்த அந்தச் சிவாசாரியார் அந்தக் கூட்டத்திலும் வந்து

கலந்துகொண்டார். அது அங்குக் கூடிய அனைவருக்கும் வியப்பாகவே இருந்தது. மற்ற நிகழ்ச்சிகள் விரைந்து முடிந்தன. செய்தி தெரிந்து அன்பர்கள் மகிழ்ந்தனர். செயல்கள் விரைந்து நிறைவேறின ; கனகாபிஷேகத்திற்கு நாளும் குறிப்பிட்டார்கள்.

கனகாபிஷேக விழாவன்று காலையில் செய்யும் வைதிக காரியங்களிலும் முன்னின்று முதன்மை வகித்தவர் அந்தச் சிவ வேதியரே. மாலை சிறப்புக் கூட்டமும் கூடியது. மேடையில் பலரும் வந்தமர்ந்தனர். விழா நிகழ்ச்சி தொடங்கத் திருமுறை ஓதப்பெற்றது. அப்பொழுது அங்கே மதுரைத் திருக்கோயில் திருப்பணிக் குழுவின் தலைவர் சர். பி. டி. இராஜன் அவர்களும் அக்குழுவைச் சேர்ந்த பலரும் மதுரைச் சொக்கேசன் திருவருட் பிரசாதமும், அவன் அருட் கொடையாக 108 பொன்மலர்களும் எடுத்துக்கொண்டு அக்கோயிற் குருக்களுடன் மேடையில் தோன்றினர் ; ஸ்ரீலஸ்ரீ குருமூர்த்திகளிடம் வழங்கினர். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல, அங்கயற்கண்ணியைத் திருமணம் கொள்ளும் நிலையில் ஸ்ரீ சோமசுந்தரப் பெருமான் திருவுருவப்படம் ஒன்றும் மகாசந்நிதானத்திடம் அக்குழுவினர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரசாதமும் திருவுருவப் படமும் பொன்மலர்களும் அந்நேரத்தில் அங்கேவந்து சேர்ந்த நிலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் மெய்விதிர் விதிர்ப்பக் கண்ணீர் வார மொழி தடுமாற உணர்ச்சி வசப்பட்டார்கள். இறைவன் திருவருள் - ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கேசன் திருவருள் கனகாபிஷேக முயற்சியின் தொடக்கமுதல் உடன் நின்றே உதவி, முடிவுறும் நேரத்திலும் தோன்றும் திருவருள் வாய்ப்பை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருவுளம் பற்றியதோடு, கூடியிருந்த மெய்யன்பர்களுக்கும் அவ்வுணர்ச்சியே மேலோங்கியிருந்தது. இவ்வாறுகச் சொக்கேசன் திருவருளே கனகாபிஷேக விழாவை முன்னின்று, உடன் நின்று, உள் நின்று நிறைவேற்றியது என்பது துணிவு.

தருமையில் கனகாபிஷேகம்

தருமபுரத்தில் கனகாபிஷேகத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே எங்கும் பரபரப்பாக இருந்தது. அன்பர்கள் வந்து சென்ற வண்ணமே இருந்தார்கள். கனகாபிஷேகச் செய்தி நிலையம் இரவும் பகலுமாக இயங்கிக்கொண்டிருந்தது. ஞான சம்பந்தம் அச்சகத்தில் கனகாபிஷேக விழா மலர் அச்சிடும் வேலை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. பந்தல், கொட்டகை அமைப்புக்கள், ஐயாயிரத்திலிருந்து பத்தாயிரம் வரை பல மாவட்டங்களிலிருந்தும் அன்பர்கள் பலரும் தருமைக்கு வரக் கூடுமே. அவர்களுக்கெல்லாம் உணவு வசதிகள், தங்குமிடங்கள் தனித்தனி அமைக்கவேண்டுமே என்ற திட்டங்களில் உருவாகிக் கொண்டிருந்தன. மடாலயத்திற்கு முன்னர் தெற்கு முகப்பிற்கு அருகில் திருக்குளத்தின் தென்கரையில் ஒரே சமயத்தில் ஆயிரம் பேர் வரை உட்கார்ந்து உணவு அருந்துவதற்குரிய உணவு விடுதிக்கொட்டகை விரைவாக வேலை தொடங்கப்பட்டது. மேடும் பள்ளமுமாக இருந்த தரையைச் சமப்படுத்தி ஒருபக்கச் சுவர் எடுத்தும், தளவரிசை செய்தும் சிமெண்ட் பூசியும் செப்பனிடப் பட்டது. அவ்விடுதியின் கடைசியிலேயே சமையல்செய்வதற்குரிய இடமும் குடிதண்ணீர்க் குழாய்களும், கைகழுவுவதற்குரிய குழாய் களும் அமைக்கப்பட்டன. உணவு விடுதிக்குக் 'கனக விலாசம்' என்ற பெயரும் சூட்டப்பட்டது. பிராமண போஜனத்திற்குத் தனியே ஓர் இடமும் அமைக்கப்பட்டிருந்தது.

வடக்கு முகப்பில் மிகப் பெரிய பந்தல் போடப்பட்டது. மேலக்கோபுரவாயில் முதல் மெய்கண்டான் நிலையம் வரை நீண்ட பந்தலும் பந்தலின் வடக்கு வாயிலில் அழகிய கோபுரக் கீற்று வேலைப்பாடுகளும் செய்யப்பட்டன. அவற்றுக்கு நடுவில் கயிலாய அமைப்பும், இருமருங்கிலும் சுப்பிரமணியர், விநாயகர் அமைப்பும் செய்யப்பட்டன. கோபுரக் கலசத்தின்மேல் சிவசிவ ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டு விளங்கின. மின் விளக்குகள் கோபுரம், கயிலாசம் முதலியவற்றில் பொருத்தப்பட்டுப் பொலிவு தந்தன.

தோம்பைகள், திரைச்சீலைகள் கட்டப்பட்டிருந்தன. எங்கும் புது மணல் பரப்பி அழகு செய்யப்பட்டிருந்தது. நான்கு வீதிகளும் மிக்க தூய்மையோடு தோரணங்கள் கட்டப்பட்டு விளங்கின. சுவர்கள் வண்ணம் தீட்டப்பட்டு விளங்கின. திருமஞ்சனவீதி யிலுள்ள குருமூர்த்தங்கள் புதுக்கப்பெற்றன. ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் ஸ்ரீ தருமபுரீஸ்வரர் கயிலாய நினைவு வளைவுகள், ஒளி விளக்கு களால் சிறந்து தோன்றின. கயிலாய நினைவு வளைவுகளுக்கு நடுவில் சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய கவின்கலைக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

செய்தி விசாரணை நிலையமாகச் சாந்தநிலையம் விளங்கிற்று. தொலைபேசி வசதியும், விசிறி வசதியும் உடையதாகக் கனகா பிஷேக விழாக் குழுவினரின் அலுவலகமாய்த் திகழ்ந்தது. வெளி யிலிருந்து வருவோர் செய்தி தெரிந்து கொள்ளக்கூடிய வகை யில் இந்நிலையம் பணிபுரியலாயிற்று. செய்தி விசாரணை நிலையம் என்ற பெயர்ப் பலகை முகப்பில் தொங்கவிடப்பட்டிருந்ததால் புதியவர்களுக்கு விளக்கம் ஏற்பட வசதியாக இருந்தது. வெளி மாவட்டங்களிலிருந்து வருவோர்கள் தங்குவதற்கு மறைஞான சம்பந்தர் நிலையம், உமாபதி நிலையம், அருணந்திசிவாசாரியார் நிலையம், மெய்கண்டார் நிலையம், நால்வர் நிலையங்கள், உயர் நிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி, கீழைக்கலை உயர்நிலைப்பள்ளி கட்டிடங்கள், தேவார ஆகம பாடசாலைக் கட்டிடங்கள் முதலிய இடங்களில் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இவையல்லாமல் தருமையாதீன மடாலயம், ஸ்ரீ சண்முகம் ஆர்ச்சிற்கு (கற்சாலை) அருகில் உள்ள செட்டிமடம், மன்னம்பந்தல் ஏ. வி. சி. காலேஜ், வீரசேகர விலாஸ் (மாயூரம்), யாத்திரிகர் பங்களா. பி. டி. பிள்ளை பங்களா, நகராட்சி உயர்பள்ளி முதலிய பல இடங்களிலும் அன்பர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அங்கங் கும் எந்த எந்த ஊர் மக்கள் தங்குவது என்று திட்டமிட்டு அவ்வப்பெயர்ப்பலகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அங்கங்கே தகுதியும், செயல்திறமும் உடைய பலரை இருக்கச்செய்து வரு வோரை உபசரித்துக் கவனித்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. வெளியூரிலிருந்து மாயூரம் ஜங்ஷனுக்கு அன்பர் கள் வந்தவுடனே அவர்கள் தருமைக்கு விரைந்து உடன்வருவ

தற்குப் பல டாக்சிகளும், சர்வீஸ் பஸ் ஒன்றும் ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தன. வரவேற்புப் பணியை ஜங்ஷனிலேயே பலர் தங்கியிருந்து கவனித்துக்கொண்டார்கள். கூட்டம் சாரிசாரியாக வந்தவண்ணம் இருந்தது. சர்வீஸ் பஸ் ஒன்று கனகாபிஷேகத் தன்று மிகத் துரிதமாக வேலை செய்யலாயிற்று. இவ்வாறு எல்லா வகையிலும் வரவேற்பு ஏற்பாடுகள் சிறந்த முறையில் நடந்து முடிந்தன.

குருவழிபாடு

வியாழக்கிழமை (9—3—61) யன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் மௌன விரதநாள். குருவாரம் குரு வழிபாட்டிற்குச் சிறந்த நாளல்லவா ? கனகாபிஷேகத்திற்கெனச் செய்யப்பெற்ற 1008 பொற்காசுகளைத் தமது குருமூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்து வழிபட எண்ணியது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளம். உடனே ஓதுவாமூர்த் திகள், அர்ச்சகர்கள் அனைவரையும் அழைத்துச் சிறந்த ஏற்பாடு கள் செய்யும்படி உத்திரவு பிறந்தது. காலை 11 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ குருஞான சம்பந்தர் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். இந்நிகழ்ச்சி அதுவரை யாருக்குமே தெரியாது. திருக்கோயில் வழிபாடுகளை முறையாக முடித்து ஸ்ரீ குருஞானசம்பந்தர் சந்நிதியில் நின்று 1008 காசுகளையும் இறைவன் திருநாமம் கூறி அர்ச்சிக்கும்படிச் சொல்லியருளினார்கள். ஆணை செயலாயிற்று. எல்லோரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் குருபக்தியை எண்ணி வியந்து கனிந்தவர்களாய் நின்றுகொண்டிருந்தனர். அன்பு வெள்ளம் கரைபுரண்டோடிற்று. அன்பர்கள்வழிபட்டுக் கண்ணும் கருத்தும் குளிர்ந்தார்கள். ஸ்ரீ ஞானபுரீசர் பொன்மேனியராகப் பொலிந் தார். பொன்வண்ணம் எவ்வண்ணம் மேனி என்ற பாடல் அடியார்கள் நினைவிற்கு வந்தது. இவ்வாறு குருவழிபாடும், குருமூர்த்திகளின் கனகாபிஷேகப் புஷ்பார்ச்சனையும் சிறப்புறப் பூர்வாங்கமாக நடந்தன. அன்று மாலை மேலக்குருமூர்த்தத் திற்கும், திருமஞ்சனவீதிக் குருமூர்த்தங்களுக்கும் அடியார்கள் புடைசூழச் சென்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபட்டருளினார்கள்.

முதல் நாள்

வெள்ளிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காலை 7 மணிக்கெல்லாம் சொக்கலிங்கப்பெருமான் பூஜை முடித்தருளினார்கள். அன்பர்கள் பலரும் வந்துகொண்டேயிருந்தனர். காலை 9 மணிக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ குருமணியவர்கள் மகாலெட்சுமி துர்க்காதேவி தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள். உலக க்ஷேமத்தின் பொருட்டு சுவாசினிவடுபூஜை, அஷ்டகஜபூஜை, கோபூஜைகள் முறையே நிகழ்ந்தன. ஒன்பது சுமங்கலிகளுக்கு உயர்ந்த ஆடைகள் வழங்கப்பட்டன. எட்டு யானைகளை வரிசையாக நிறுத்தி அவைகளுக்கு மாலை முதலியன அணிவித்துத் தூப தீபம் காட்டி செய்த அஷ்ட கஜபூஜை வேறெங்கும் காணமுடியாத அரிய காட்சியாக இருந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களே இந்தப் பூஜைகளை நிகழ்த்தினார்கள்.

இரண்டாம் நாள்

சனிக்கிழமை காலை 7 மணிக்கெல்லாம் ஸ்ரீ சொக்கநாதர் பூஜையை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் வைத்தீஸ்வரன்கோவிலுக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ வைத்திய நாதசுவாமி, ஸ்ரீ தையல்நாயகி, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி தரிசனம் செய்துகொண்டார்கள். சனிவாரத்தன்று சனிபகவான் வழிபாடு இன்றியமையாததல்லவா? சனீஸ்வரபகவான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருநள்ளாற்றுக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சனீஸ்வரபகவானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. "வேயுறு தோளிபங்கன்" என்ற திருப்பதிகச்சிந்தனையுடன் திருக்கடவூருக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ அபிராமி அம்பாள், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அன்புத் தெய்வமல்லவா? ஸ்ரீ அமுதகடேசுவரர், ஸ்ரீ அபிராமி ஸ்ரீ காலசம்காரமூர்த்தி தரிசனம் செய்து கொண்டார்கள். மிருத்துஞ்சய ஹோமம் மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது திருக்கடவூர்த் தரிசனத்திற்குப்பின் தருமைக்கு எழுந்தருளினார்கள். தருமையில் ஸ்ரீ மகாலெட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் நவக்கிரஹ ஹோமம் சிறப்புடன் நடைபெற்றது.

கனகாபிஷேகத் திருவிழா

கனகாபிஷேகத்திற்கு இரண்டு நாள் முன்னதாகவே தருமை ஜன சமுத்திரத்தால் நிறையத் தொடங்கி விட்டது. கோவை, நெல்லை, சென்னை, தென்னாற்காடு, வடாற்காடு, இராமநாதபுரம், மதுரை, டில்லி, கல்கத்தா, காசி முதலிய பாரதநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் எண்ணற்ற மக்கள் ஆடவரும், பெண்டிருமாகக்குழுமினர். ஸ்பெஷல் பஸ்கள், டாக்சிகள் தருமை வீதியில் அங்குமிங்கும் பறந்தவண்ணமிருந்தன. வேட்டுகள் அதிர்ந்த வண்ணம் இருந்தன.

காலை 8 மணிக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதர் பூஜைக்கு எழுந்தருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளியிருந்து வழிபட்டார்கள். பூஜைமடத்தில் பக்தகோடிகள் திரளாகக் கூடியிருந்து வழிபட்டனர்.

காலை 9 மணிக்கெல்லாம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு அன்பர்கள் புடைசூழ எழுந்தருளினார்கள். அதற்குற்குள்ளாகவே திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம் மக்கள் கூட்டத்தால் நிரம்பிவிட்டது. ஒவ்வொருவருக்கும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவுருவம் பொறித்த சின்னம் கனகாபிஷேக நினைவாக வழங்கப்பட்டிருந்தது. இதுவல்லாமல் அநுமதி அட்டைச்சீட்டுகளும் வழங்கப்பட்டிருந்தன. கூட்டத்தை மன்றத்தில் சமாளிக்க இச் சீட்டுகள் உள்ளவர்களே அனுமதிக்கப்பட்டனர். கூட்டத்தை ஒழுங்குபடுத்தி அனுமதிக்க ஆதீனக் கல்வி நிலைய சாரண மாணவர்களும் மாயூரம் நகராட்சி தேசிய உயர்நிலைப்பள்ளிச் சாரணத் தொண்டர்களும் போலீசாரும் ஆங்காங்கு நின்று ஆற்றுப்படுத்தினர். திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம் புதிய அலங்காரத்தோடு ஆலவட்டங்களோடு அணிபெற்று விளங்கியது. மன்றத்து மேடை மிகஅழகாக ஒப்பனை செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் எழுந்தருளிக் கனகாபிஷேகங் கொள்ளும் புண்ணியப் பேறுடைய மஞ்சம் மன்றத்தின் நடுவில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆண்களும்,

பெண்களும் தனித்தனி அமர்ந்து கனகாபிஷேகம் காண ஆவலோடு பலமணிநேரம் எதிர்பார்த்த வண்ணம் இடத்திற்கு முந்தினர். ஒலிபெருக்கிகளின் மூலம் அவ்வப்போது நிகழ்ச்சி முறைகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. எல்லோர் அகமும், முகமும் புண்ணியாபிஷேகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

ஸ்ரீ ஞான்புரீஸ்வரர் திருக்கோயிலில் திக்பாலக அபிஷேகம் கொண்டருளி ஸ்ரீ மகாலெட்சுமி துர்க்கையைத் தரிசித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளினுர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் இவ்வபிஷேகத்தைச் செய்வித்தார்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமான் திருக்கோயிலிலிருந்து தக்க மேள வாத்தியங்களுடன் தங்கக் குடங்கள் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்திற்கு எழுந்தருளுவிக்கப்பெற்றன. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் புடைசூழச் சிவாசாரிய பெருமக்கள் கலசங்களை எடுத்துக்கொண்டு வந்தனர். ஆதீன மடாலயத்திற்கு முன்பு மன்றத்திலேயே உள்ள மேடையில் கலசங்கள் எழுந்தருளுவிக்கப்பெற்றன. திருமுறை பாராயணமும், வேதபாராயணமும் நடந்துகொண்டிருந்தன. சரியாக 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்களைக் கனகாபிஷேகத் திருவிழாக் குழுவினர் கனகாபிஷேகத் திருமன்றத்திற்கு வணங்கி வரவேற்று எழுந்தருளுவித்தனர். தக்க மேள வாத்தியங்களோடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் எழுந்தருளினுர்கள். டாக்டர் பி. சுப்பராயன், சர் பி. டி. ராஜன், இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் முதலிய பெருமக்கள் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளோடு மேடைக்கு வந்தனர். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் தம் குருபக்தி தோன்றத் தம் குருமூர்த்திகளை கைலாகு கொடுத்து அழைத்து வந்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் மேடைக்கு எழுந்தருளியதும் பூரணபலதானம் நடைபெற்றது. 108 தேங்காய்களைத் தாம்பூலம் தட்சிணைகளோடு அந்தணர்களுக்கும், ஓதுவாமூர்த்திகளுக்கும் மற்றவர்களுக்குமாக வழங்கியருளினுர்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மஞ்சத்தில் அழகு செய்யப்பட்டிருந்த சித்ராசனத்தில் எழுந்தருளினார்கள். (தனியே இவ்விதழில் கொடுக்கப்பட்டிருக்கும்) கனகாபிஷேக விதிமுறைப் படி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் வழிபாடு செய்யத்தொடங்கினார்கள். ஆதீன ஓதுவாமூர்த்திகள் இருவரும் வைதீக கிரியைகளுக்கு உடனின்று உதவினார்கள். முதலில் பொற்காசுகள் பலவற்றைப் பீடத்தின் அடியில் இட்டு மலர்கள் தூவப்பட்டிருந்தன. பிறகு பாவனபிஷேகம் ஆதீன சம்பிரதாயப்படி நடைபெற்றது. இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் திருமுறைப்பாராயணம் செய்துகொண்டிருந்தார்கள். அன்பர்கள் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்தவண்ணம் இருந்தனர். பாவனபிஷேகம் நிறைவுற்றது. ஐந்தடுக்குத் தீபாராதனை அன்பர்களின் ஹர ஹர முழக்கத்தோடு நிகழ்ந்தது. மன்றத்திலிருந்த அனைவரும் கயிலைக்குருமணி வாழ்க, நமப்பார்வதீ பதயே, தென்னாடுடைய சிவனேபோற்றி என்பன முதலிய பல திருநாமங்களைச் சொல்லிப் பரவினர். முறையே சோடசோபசாரங்கள் நடந்தன. கற்பூரப் பஞ்சமுக ஆரத்தி ஆனதும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அபிஷேகம் செய்ய ஆரம்பித்தார்கள். கனகாபிஷேகம் முதலில் அர்ச்சனா ரூபமாக நடைபெற்றது. சிவ சகஸ்ரநாமங்களை ஆதிசைவர்கள் முறையே படிக்க அர்ச்சனை தொடங்கியது. ரோஜா மலர்கள் நிரம்பிய கூடைகள் பல ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் திருமுன்பு வைக்கப்பட்டிருந்தன. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் 1008 பொற்காசுகளால் அர்ச்சனை செய்யத்தொடங்கினார்கள்.

ஒவ்வொரு காசையும் ஒவ்வொரு ரோஜாமலரோடு சேர்த்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் திருமுடியிற்சார்த்தி அர்ச்சித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிவோகம் பாவனையாக சின்முத்திரையோடு அருட்காட்சி வழங்கிக்கொண்டிருந்தார்கள். குருவே சிவம் என்று கூறிய திருமந்திரப் பொருள் அடியார்களின் அநுபவத்துக்கு வந்தது. சிவநாமார்ச்சனை குருவுக்கும் உரியது என்ற உண்மையநுபவம் எல்லோர்க்கும் புலப்படலாயிற்று. கல்லூரிப் பேராசிரியர்கள் ஒலிபெருக்கிகளில் கனகாபிஷேக விளக்கங்களைச் சொல்லிக்

கொண்டிருந்தனர். எல்லோரும் தங்கள் வாழ்க்கையிற் பெறுதற்கரிய காட்சியைக் காணுகிறோம் என்ற பெருமிதத்தோடு கண்டு கண்டு கண்ணீர் வார மெய்ம்மயிர் சிலிர்ப்பக் குருதரிசனம் செய்தபடியே இருந்தார்கள். 1008 அர்ச்சனைகளுக்குப் பிறகு அபிஷேகமாகப் பொற்காசுகளால் திருமுடியில் அபிஷேகம் செய்தார்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள். எல்லோரும் மிக பக்தி சிரத்தையோடு கண்டு களித்துச் சிவநாம முழக்கம் எழுப்பிக் கொண்டிருந்தனர். ஆதீன போட்டோகிராபர், சென்னை நாரதர் ஸ்ரீநிவாசராவ், மாயூரம் என். இராமகிருஷ்ணு முதலியோர் நிழற்படம் எடுத்தபடி இருந்தனர். சிதம்பரம் கெம்பு போட்டோ சர்வீசார் கனகாபிஷேகக் காட்சிகள் அனைத்தையும் சலனப்படங்களாக எடுத்துக்கொண்டிருந்தனர். கனகாபிஷேகத்திற்குப் பிறகு தீபாராதனை நடைபெற்றது. எல்லோரும் முறையாக வணங்கித் திருநீறு பெற்றுக்கொண்டிருந்தனர். கயிலைக் குருமணியவர்கள் ஒவ்வொருவருக்கும் மாலை மரியாதை செய்து சிறப்பித்தார்கள். வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களனைவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களிடம் வணங்கித் திருநீறு பெற்றுக்கொள்ளவிரும்பியதால் 2 மணி ஆகியும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் மஞ்சத்தைவிட்டு எழுந்தருள இயலாமற்போயிற்று. அந்நிலையிலும் அன்பர்களுடைய உற்சாகத்தையும், ஆர்வத்தையும் கண்டு அயராது திருநீறு வழங்கிக் கொண்டே இருந்தார்கள்.

கனகவிலாசில் 11 மணியளவிலிருந்து பந்தி தொடங்கி விட்டது. ஆயிரம் பேர் அமர்ந்து உண்ணக்கூடிய இடமிருந்தும் பலமணி நேரம்வரை மக்கள் பல உணவருந்திக் கொண்டேயிருந்தனர். இதுவல்லாமல் வடக்குமடம், ஆகம பாடசாலை, துவக்கப்பள்ளி, பந்திக்கட்டு, பண்டாரக்கட்டு முதலிய பல இடங்களிலும் பந்தி நடந்துகொண்டேயிருந்தது. மாலை 4 மணிவரை மாகேஸ்வரபூஜை நடந்தபடியேயிருந்தது. செய்திநிலையத்தில் 3 மணியிலிருந்து வரவேற்பிதழ்கள் பதிவாகிக்கொண்டேயிருந்தன.

மாலை சரியாக நான்கு மணிக்கெல்லாம் சிறப்புக் கூட்டம் தொடங்கியது. மூன்று மணியிலிருந்தே திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் இடம் பிடித்துக்கொள்ள ஆரம்பித்தனர்.

மன்றம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. தலைவர் அவர்களை மேடைக்கு வரவழைக்க வேறு வழி தேவையாயிருந்தது. அளவு கடந்த உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் செவிச்செல்வம் நுகர அன்புலகம் எதிர்பார்த்தபடி இருந்தது. இந்திய அரசாங்கப் போக்குவரவு அமைச்சர் கனம் டாக்டர் திரு. பி. சுப்பராயன் அவர்கள் (பார்-அட்-லா) குறிப்பிட்ட நேரத்திற்கே வந்துவிட்டார்கள். திருமடத்திற்குச் சென்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியைத் தரிசித்து மேடைக்கு வந்து சேர்ந்தார்கள். கயிலைக் குருமணியவர்களும் பெருமக்கள் புடைசூழ மேடைக்கு எழுந்தருளி ஞானக்கதிரவனைக நடுவண் எழுந்தருளினார்கள். அருகில் அமைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வந்து அமர்ந்தருளினார்கள். தருமையாதீனத்து நான்காவது குருமூர்த்திகளாகி அருளரசு செலுத்திய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளும் எழுந்தருளியிருந்த திருக்கோலத்தை நினைவூட்டியது. குருமணியவர்களின் அருகில் டாக்டர் திரு. பி. சுப்பராயன், திரு. பி. டி. ராஜன், திரு. ஐயாசாமிச்செட்டியார், திரு. சந்திரசேகரன் (கலெக்டர்) திருமதி. செளந்தரம் கைலாசம், திருமதி. சி. ந. குழந்தையம்மாள், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. இரத்தினவேலு சுப்பிரமணியம், திரு. காசிநாததுரை, டாக்டர் திரு. ரங்கசாமிப்பிள்ளை முதலிய பெருமக்கள் முகமலர்ச்சியுடன் அடக்கமும் அன்பும் தோன்ற வீற்றிருந்தனர். இசையரசு அவர்களின் திருமுறைப்பாடலோடு கூட்டம் தொடங்கிற்று.

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் தொடக்க உரை கூறியருளினார்கள். திருமுறை ஓதி ஓதிக் கனிந்து கசியும் திருவுள்ளம் உடையவர்கள் அவர்கள். பன்னிருதிருமுறைகளையும் அழகிய முறையில் அச்சிட்டுக் குறைந்த விலையில் தமிழுலகிற்கு வாரி வழங்கிய வள்ளன்மை உடையவர்கள் அல்லவா? அவர்களது திருமுறை தோய்ந்த திருவுள்ளப்பாங்கு அவர்களின் தொடக்கவுரையில் ஒளி வீசிற்று. விழா மலர் காட்டுமன்னார்குடி நாட்டுச்சின்னப்பண்ணை திரு. எம். இராமலிங்கம் பிள்ளை அவர்களால் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வெள்ளிப் பேழையில்

வைத்துக் காணிக்கையாக்கப்பெற்றது. சிதம்பரம் டாக்டர் திரு. ரங்கசாமிப் பிள்ளை அவர்கள் அழகொழுகும் செந்தமிழில் அனைவரையும் வரவேற்ற வரவேற்புரை அன்றைய விழாவிற்கு நல்ல எடுப்பாக இருந்தது. கனகாபிஷேக குழுவினரின் சார்பில் திருச்சித் திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜ பிள்ளை அவர்கள் வரவேற்புரையை வாசித்தளித்தார். மதுரை சர். பி. டி. ராஜன் அவர்கள் கயிலைக் குருமணிக்குக் கனகாபிஷேகக்குழுவின்சார்பில் தலைவர் திரு. எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் பாராட்டுரையொன்றை வாசித்துச்சமர்ப்பித்தார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. ராமையா அவர்கள் மலர்மாலை சூட்டினர். மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத்தின் சார்பில் திரு. பி. திருஞானம் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிக்குப் பாராட்டுப் பணிவிதழ் ஒன்றைப் படித்தளித்தார். டாக்டர். திரு. பி. சுப்பராயன் அவர்களுக்குக் கனகாபிஷேக விழாக்குழுவின் சார்பில் ஒரு வரவேற்புரை வாசித்தளிக்கப்பெற்றது. திரு. ஜி. சபாபதிப் பிள்ளை அவர்கள் கனம் மந்திரி அவர்கட்குப் பொன்னுடை போர்த்தினர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளுடைய அரும்பெரும் பணிகளைப் பாராட்டி இலஞ்சி திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் எம். எல். சி., இராமநாதபுரம் திரு. சின்னதுரை, திரு. ராஜ்குமார், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், திரு. எஸ். ஏ. ஐயாசாமிச் செட்டியார், டாக்டர். இரத்தினவேலு சுப்பிரமணியம், திருமதி. சௌந்தரம் கைலாசம், திரு. கிரிதாரி பிரசாத், திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான், திருமதி. சி. ந. குழந்தையம்மாள், திரு. அருணாசலம் பிள்ளை, திரு. பி. ஏ. ராஜு செட்டியார், திருமதி. புஷ்பம் நடராஜன், திரு. இராமசாமி ராஜா, திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. இரத்தின முதலியார், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. ம. க. சுந்தரேசப்பட்டர், திரு. பி. டி. ராஜன் முதலியோர் பாராட்டுரைகள் நிகழ்த்தினர். விழாவிற்கு வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை திரு. கே. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்கள் வாசித்தார். பல பிரமுகர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளுக்குப் பொன்னுடையும், பூமாலைகளும் சார்த்தி வ[illegible]னர். ஊராட்சி

மன்றங்கள், திருநெறி சபைகள், மன்றங்கள் முதலிய அறுபதுக்கு மேற்பட்ட ஸ்தாபனங்களால் வாழ்த்திதழ்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு ஆசி வழங்கியருளிய அருளுரை மிக உருக்கமாக அமைந்தது. சிறப்புக் கூட்டத்தின் உச்சநிலைக்கு அவ்வருளுரை அனைவரையும் அழைத்துச்சென்று தெய்வீக மணத்தை நுகரச்செய்தது. தமிழன் உள்ளன்போடு செம்மையாக வாழவேண்டுமானால் தெய்வபக்தியினால்தான் வாழமுடியும் என்று அவர்கள் உரைத்தருளிய உபதேசமொழி அனைவருள்ளத்திலும் ஆழப்பதிந்துவிட்டது. தாயும், தந்தையும் செய்யும் பாராட்டை ஏற்றுக்கொள்ளவேண்டியது குழந்தைகளின் கடமை. அதுபோல அன்பர்களின் அன்பு வலையை எம்மால் நீக்க இயலாமற் போயிற்று என்று அவர்கள் கூறியபோது அடியார்களின் கண்களில் கண்ணீர்த்துளிகள் அரும்பிநின்றன. நமக்களித்த கனகாபிஷேகப் பொருள்கள் அனைத்தையும் தருமையில் புதிதாக நிறுவப்பெறும் சைவசித்தாந்தக் கல்லூரிக்கும், மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன்கோயில் திருப்பணிக்கும் அளிக்கின்றோம் என்று அவர்கள் அருளியபோது அன்பர்களின் ஆரவாரம் பல மடங்காக எழுந்து விண்ணை அளாவியது. விழாக்குழுவின் பொருளாளர் திரு. பி. திருஞானம் பிள்ளை அவர்கள் நன்றி கூறினார்கள்.

சைவ சித்தாந்தக் கல்லூரி

மாலை, ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் குருமூர்த்தத்திற்கு அண்மையில் சைவ சித்தாந்தக் கல்லூரிக்கு டாக்டர். திரு. பி. சுப்பராயன் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளின் நல்வாழ்த்துடன் அடிப்படைக்கல் நாட்டி விரிவுரையாற்றினார்கள்.

பட்டணப்பிரவேசம்

இரவு 10 மணிக்குப் பட்டணப்பிரவேச நிகழ்ச்சி தொடங்கியது. இரவு 8 மணிமுதலே ஸ்ரீ தருமபுரீஸ்வரர் ஆலயத் திருமுன்புள்ள பந்தலில் சிவிகை அலங்காரம் கைதேர்ந்த சிற்பிகளால் சிறப்புறச் செய்யத்தொடங்கப்பெற்று நிறைவுற்றிருந்தது. மக்கள் கூட்டம் பட்டணப்பிரவேசக்காட்சியைப் பார்க்கவேண்டுமென்றே

பெருகலாயிற்று. பல கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் ஆண்களும், பெண்களும் தம்தம் குழந்தைகளோடு வந்து கூடிய காட்சி மிகப் பழையகாலத்துத் திருவிழா நிகழ்ச்சியை நினைவூட்டி யது. தருமபுரம் நான்கு வீதிகளிலும் சின்னஞ் சிறிய பெட்டிக் கடைகளும், மிட்டாய்க்கடைகளும் வந்து கூடிவிட்டன. தருமபுரம் முழுவதும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்று அழகுற விளங்கியது. பந்தல் கயிலாய வளைவும், சண்முகவிலாச மாளிகை திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம், சுப்பிரமணியம் வளைவு முதலிய பல இடங்களிலும் சீரியல்செட் வைக்கப்பட்டு ஒளிவளர் விளக்கு மயமாய் இருந்தது. தோரணங்கள் நான்கு வீதிகளிலும் தொங்கவிடப்பட்டிருந்தன. அவரவர் மனைகளின் முன்பும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளை வரவேற்குமுகத்தான் பூரண கும்பங்கள் ஆரத்திகள் முதலியன அமைக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் இரவு 10 மணிக்குப் பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளினர்கள். மேளவாத்தியங் கள் ஒலித்தன. திருச்சின்னங்கள் முழங்கின. அன்பர்கள் ஹர ஹர முழக்கம் செய்தனர். திருவீழிமிழலை சகோதரர்கள், திருவிடைமருதூர் வீருசாமி, மதுரை பொன்னுத்தாய் முதலிய சிறந்த நாகஸ்வர வித்துவான்கள் தங்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர். ஜனவெள்ளத்தோடு சங்கீத வெள்ளமும் கலந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் 10-30 மணிக்கெல்லாம் சிவிகையில் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் ஜெபித்து ஆரோகணித்தார்கள். திருஞானசம்பந்தப்பெருமானுல் வழங்கப் பெற்ற சிவிகையில் உலகெலாம் உய்ய ஐந்தெழுத்தோதி அமர்ந் தருளிய காட்சியை நினைப்பூட்டியது. குமரகுருபரர் சொல்வது போல் இரண்டு ஞானசம்பந்தர்களும் ஒன்றுந் தன்மையிது என்பதை எடுத்துக்காட்டியது. பெருங்கூட்டங்களுக்கிடையே சிவிகை மெல்ல ஊர்ந்து மிதந்தது. குறவன், குறத்தி, மயில் நடனம், வாணவேடிக்கை, பொய்க்கால்குதிரை முதலிய பாமர ரஞ்சகமான கேளிக்கைகள் ஒருபுறம், நாகஸ்வரமும், பாண்டு வாத்தியமும் ஒருபுறம், பக்தர்கள் ஒருபுறம் இப்படியாக சிவிகை தருமைத் திருவீதிகளை வலம்வரத்தொடங்கியது. எட்டு யானைகள்

முன்னே செல்ல எடுபிடிகள் பின்னே வர மிக நீண்ட ஊர்வல மாக இஃது அமைந்திருந்தது. நான்கு திருவீதிகளிலும் பூர்ண கும்ப மரியாதை செய்யப்பெற்றது. அவரவர் தத்தம் மனைகளிலும் தோரணம்கட்டி அலங்கரித்து கோலமிட்டு ஆரத்தி எடுத்து வழிபட்டுத் திருநீறு பெற்று இன்புற்றனர். வழி நெடுகிலும் பெருமக்களுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் மலர் மாலை சூட்டி அருளினார்கள்.

சிவிகை சரியாக மூன்றுமணிக்குத் திருமடத்தை அடைந்தது. மன்றத்தில் கொலுவிருந்து அருட்காட்சி வழங்கினார்கள். அடியார் களுக்குத் திருநீறு அளித்து ஆசி வழங்கினார்கள். அன்பர்கள் பாத காணிக்கை வைத்து வழிபட்டார்கள்.

நவமணிமாலை கீர்த்தனை

வித்துவான். ப இராமநாதபிள்ளை

இராகம் - சுரடி] [தாளம் - ஜம்பை

பல்லவி

திருவினோடு திறலளிக்கும்—உருவான லக்ஷ்மிதுர்க்கை
தருவளருந் தருமபுரம்—தேவிக்கு மங்களம். (திருவி)

அநுபல்லவி

அருமறை யாறங்கம்வளர்—திருமுறைக ளவைவிளங்க
பொருளுணர்த்தும்—அருளாளர் அனைவர்க்கும் மங்களம். (திருவி)

சரணம்

உருவேற வேயோதி—ஒருகோடி அர்ச்சித்து
திருவேறத் தியானத்தால்—பெருகவளர் சந்நிதியாம்
உருவளரு மையைந்தாம்—உயராட்சி தானோங்க
வருநாதர் சுப்ரமண்ய—குருவுக்கு மங்களம். (திருவி)

கனகாபிஷேகங்கொண்டருளிய

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின்

அருளுரை

அன்பர்களே !

இன்று நீங்கள் எல்லாம் உள்ளன்போடு, திரிகரண சுத்தியோடு இந்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சமயப் பேரவையினராக இங்கு வந்து கூடியிருக்கிறீர்கள். தமிழன் எதைச்செய்வானே அதைச் செம்மையான முறையிலே செய்து காட்டியிருக்கிறீர்கள். இந்நற்செயலைத் தக்க ஒரு பெரியாரைக் கொண்டு நிகழ்த்தியிருக்கிறீர்கள். தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டு புரிவதற்கேன்றே இமயம் முதல் குமரிவரை அறக் கட்டளைகள் பலவற்றை நிறுவியுள்ள நமது கண்மணியுட் சிறந்த நன்மணியாகிய அருணந்தித் தம்பிரான் அவர்களைக் கொண்டுஅபிஷேகம் புரிந்துள்ளீர்கள். சைவப்பெருமக்களாகிய உங்களுக்குச் செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் இன்றுபோல் என்றும் நிறைவுண்டாவதாக.

உங்களுடைய இந்த நன் முயற்சி நம்முடைய உள்ளத் திலும் பல சிந்தனைகளைத் தோற்றுவித்தது. "கனகத் திரளே போற்றி! கயிலை மலையானே போற்றி போற்றி !!" என்ற அப்பரடிகள் திருவாக்கை மெய்ப்பிக்கச் செய்வது இந் நன்முயற்சி. இச்சிந்தனைகளை உளநூல் தெரிந்த மருத்துவரோ அல்லது ஆசிரியரோ தாம் நன்கறியலாம். ஆயினும் இந்தக் கனகாபிஷேகத்துக்கும் ஒரு சந்நியாசிக்கும் என்ன சம்பந்தம் இருக்கமுடியும்? முதற்கண் அதை ஆராயவேண்டியது உங் களது கடமையுந்தான், நாமும் ஆராய்ந்து சிந்தித்து ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலைஉண்டு. ஆண்டவனே அன்பர்வலையில் அகப்படும் ஓர் வள்ளலாக இருக்கிறன் அல்லவா? நாம் உங்களுடைய அன்பு வலையில் அகப்படாமல் இருக்கமுடியுமா? இறைவனை இந்தக் கனகத்தினுலே, அபிஷேகத்திலே ஏமாற்றி விடமுடியாது. ஆனல் உள்ளன்போடு, ஆழ்ந்த பக்தியோடு எதைச் செய்தாலும் வெற்றிபெறலாம். இதை நோக்கும்போது

நாம் செம்மையாக வாழவேண்டுமானுல் தெய்வபக்தி யிருந்தால் தான் வாழமுடியும் என்ற குறிக்கோளையும் அடைதல்வேண்டும். உயர்ந்த இக்குறிக்கோளை உள்ளத்திலே கொண்டுள்ள உங்கள் அன்பின் மலர்ச்சியாக நிகழ்கின்றது இந்த விழா. இதனை உணர்ந்தே நாம் பலநாள் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து இசைய நேர்ந்தது. இதனை ஏற்றுக்கொள்ளும்படி திருவருள் ஆணை ஒன்றும் தூண்டித் துணைநின்றது. விரிக்கிற் பெருகும்.

இன்றுபுகழ்உடம்பெய்தியுள்ள கண்ணப்ப செட்டியாரவர்கள் எம்மிடம் பலமுறை வந்து " மகாசந்நிதானத்தில் இதை ஏற்றுக் கொண்டதாகத் திருவாய்மலரவேண்டும். அப்பொழுதுதான் அடியார்களாகிய எங்களுக்கு அமைதி ஏற்படும்'' என்ருர். ''கண் ணப்பர் அவர்களே! கண்ணப்பர்என்றபெயருக்கேற்ப எல்லையற்ற அன்பின் முறையிலே ஆதீனத்துக்குத் தாங்கள் வந்துகொண் டிருக்கிறீர்கள். மாயூரம் பெருமக்கள் - சைவப்பெருமக்கள் - குறிப்பாக B. திருஞானம்பிள்ளை, இராமநாதஐயர் (முருகதாசர்), காட்டுமன்னார்குடி சின்னப்பண்ணை, M. இராமலிங்கம் பிள்ளை, டாக்டர் அரங்கசாமிப் பிள்ளை, N. சோமசுந்தரம் பிள்ளை, S. A. அய்யாசாமிச் செட்டியார், K. பாலசுப்பிரமணியஐயர். I. A. சிதம் பரம்பிள்ளை, அருணுசலக் கவுண்டர், ம. க. சுந்தரேசபட்டர், முதலிய எல்லோரும் சேர்ந்து என்னவோ பேசிக்கொண் டிருக்கிருர்கள். தாங்களும் அங்குப்போய் ஆம், ஓம் என்று அவர்களோடு சேர்ந்துகொண்டு தலையசைத்துவிடாதீர்கள் '' என்ருேம். அவரோ நாம் சொன்னதை மனத்திற்கொள்ளாமல் '' இன்றே இதனைத் தீர்மானம் செய்துவிடவேண்டும். அவர்கள் இதனை வேண்டாம் என்று இன்று இங்கு வருவதற்குச்சற்றுமுன் கூட என்னிடம் சொல்லி அனுப்பியிருக்கிருர்கள். இருந்தாலும் அவர்களை நம்முடைய அன்பால் - நமக்கு அவர்களிடம் உள்ள பக்தியின்வலிமைகொண்டு - ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆண்டவனும், அடியார்களும் உண்மை அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள்தாமே. இனி இதைப் பேச்சளவிலேயே - சிந்தனை நிலையிலேயே வைத்துவருதல் சரியல்ல. இதுவரை பேசிவந்ததைச் செயல்படுத்துவதற்குள் வழிவகைகளை ஆராய்ந்து முடிவுசெய்துகொண்டுதான் நான் என் ஊருக்குப்போகும் எண்ணத்தோடு இம்முறை வந்திருக் கிறேன். இதுபோன்ற நல்லதொரு சிறந்த பணியை உருவாக்க

நாம் எல்லோரும் இன்றுமுதல் முழுமுயற்சியோடு செயற்படுதல்வேண்டும் '' என்று பேசி முடிவுசெய்துகொண்டு வந்துவிட்டார். அக்கூட்டத்தில் மேற்குறித்த அன்பர்களும் மற்றும் வெளியூர்களிலிருந்து பல மெய்யன்பர்களும் வந்து கூடிக் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைப் பின்னரே நாம் தெரிந்துகொள்ளமுடிந்தது.

ஆனல், இந்தப் பாராட்டு, தாயும் தந்தையும் கூடிக் குழந்தைக்குப் பாராட்டுச் செய்வதைப்போன்றது. குழந்தையினாலேபிற்காலத்தில் தமக்குப்பிரதிப்பிரயோஜனம் ஏற்படும்என்ற குறிக்கோளுடன் பெற்றோரின் பாராட்டு அமையாது. அதைப் போலவே தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்து குழுமியிருக்கும் பெருமக்கள் தாயும் தந்தையுமாக நின்று இந்த ஞானக் குழந்தைக்கு இந்தக் கனகாபிஷேகத்தைச் செய்திருக்கிறீர்கள். தூய்மையான உள்ளத்தின் விளைவே இது என்பதைத் தவிர வேறொன்றும் நமக்குச் சொல்ல இயலவில்லை. சொல்லுவது பொருத்தமும் ஆகாது. எல்லாம் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளின் விளைவே.

திருவருள் விளைவு என்றதும் திருக்கயிலாய யாத்திரை நினைவுகள் நம் உள்ளத்தில் மூழ்குகின்றன. ஆம் ; அங்கே நிகழ்ந்த ஒவ்வொன்றும் திருவருள் உறுதியை விளக்குவதாகவே இருந்தது. “தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம்பெருக்கும் பிள்ளையார் '', “உம்பர்களும் அதிசயிப்பச் சிவம்பெருக்கும் ஒலிநிறைத்தார் உலகமெல்லாம் '' என்று சேக்கிழார் சுவாமிகள் அருளுவதுபோல், உலகமெங்கும் சிவம்பெருக்கும் ஆசாரியப் பெருமக்கள் நிறைந்துள்ளார்கள். அவ்வொலி கயிலாயத்திலே எங்கும் நிலவுகிறது.

“உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி '' என்று கயிலைப்பெருமானை வாய்குளிரப் பாடுகிறார் வாக்கின் மன்னர். கந்தசாமிச் செட்டியார் நம்முடன் யாத்திரையில் உடன் வந்த ஒரு மெய்யன்பர். அவரிடம் நாம் இத்தெய்வத் தமிழ்ப் பகுதியை நினைப்பூட்டி, “அப்பர் சுவாமிகள் உண்ணாதும் உறங்காதும் இருந்தாய் '' என்று கயிலாயபதியைப் போற்றியுள்ளார்கள். நாமோ “சோழநாடு சோறுடைத்து '' என்னப்பட்ட நாட்டிலிருந்து வந்திருக்கிறோம்'' என்றோம். அவர் குறிப்பைஉணர்ந்து

கொண்டார். சோழநாட்டிலிருந்து சென்றவர்களல்லவா? கயிலையங்கிரியிலே மேற்குமுகத்திலே இலிங்கப் பிரதிஷ்டை செய்து ஐந்து அன்னங்கள் செய்து நிவேதனம் புரிந்து வழிபட்டோம்; திருவருள் துணைநிற்கவே இது நிகழ்ந்தது; அதற்கு ஆவன செய்தார். ஆண்டவன் திருமுன்னர்நின்று, நாங்கள் அதைச்செய்தோம் இதைச்சேய்தோம் என்று சொல்லுதல் மட்டுமல்ல, கருதுதலும் பிழை. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பது ஆன்றோர் வாக்கு; அவன்தாள் வழிபடவும் அவனருளே துணைநிற்க வேண்டும். அத்தகு சமயவாழ்வில்லையானுல் மனிதன் சிறப்படையமாட்டான்; எந்தச் சமயத்திலும் வாழமுடியாது. எந்த அரசியல்வாதியும், விஞ்ஞானவாதியும் எல்லாம் கண்டு ஆராய்ந்து ஆராய்ந்து இறுதியில் நம் ஆத்மீக நேறிக்குத்தான் திரும்பிவருகிருன். வேகுதூரம் போவானேன்? மேய்யன்பர் பலபேர் இங்கே வந்தார்கள். "சுவாமி" என்ருர்கள்; "பல இடங்களையும் சுற்றிப்பார்த்துவிட்டோம்; மனம் அலைகிறது; அமைதி அடைந்தபாடில்லை. ஆத்ம ஞானமும் ஒருமைப்பாடும் வேண்டுமேன்ருல் தங்களுடைய சாத்திர, சமய வழிபாட்டு நேறியிலே சென்ருல்தான் கிட்டும்" என்ருர்கள்; "ஆன்மசாந்திஏற்படும்" என்றும்உரைத்தார்கள். அப்போது எமக்கு நினைவுக்குவந்தது திருவள்ளுவர் திருவாக்கேயாகும்:-

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தேய்வத்துள் வைக்கப் படும்"

வாழ்வாங்கு வாழ்தல் என்பது சமயநேறிநின்று உண்மையோடு, அன்போடு வாழும் பண்புள்ள வாழ்க்கையே ஆகும். உலகிற் பலபேர் நினைப்பு இப்படிச்சேல்வதில்லை; போருளே நிலைத்தது; அதுவே தேய்வம் என்றும் நினைத்துவிடுகிருர்கள். பூரியார் கண்ணும் உள என்று போருளை ஒதுக்குகின்ருர் வள்ளுவர்.

"போருளற்ருர் பூப்பர் ஒருகால் அருள்அற்ருர்
அற்ருர் மற்றுஆதல் அரிது".

"அருளை இழந்தவர் அற்றவரே; இழந்தால் மீட்டும் பேறவும் இயலாது; அவர் ஆதல் என்றும் இல்லை" என்று கூறுகிருர். இத்திருவருளைப் பேறவேண்டுமானுல் குருவருள் துணைநிற்க வேண்டும் என்று இங்கே சேந்தமிழ்ச்சேல்வி குழந்தையம்மான்

கூறியது தெளிவான உண்மையாகும். ஆசாரியனே சிறந்த மார்க்கதரிசியாக - வழிகாட்டியாக இருந்து ஆன்மலாபம் அடையச் செய்கின்றான். அன்பர் அரங்கசாமிப் பிள்ளை குறிப்பிட்டதுபோல் ஆசாரியன் அருளின் தேக்கமாக உள்ளான்.

உயிர், இறை, மலம் என்ற மூன்றும் அநாதி; ஆனால் இறைவனுக்கு ஏன் உயிர் கட்டுப்பட்டிருக்கவேண்டும் என்ற வினா சிலபேர் உள்ளத்தில் எழக்கூடும். நம் சித்தாந்தநெறி நின்று ஆசாரியப் பெருமக்களின் அருள் மொழிகளை ஊன்றி உணர்ந்தால்அல்லாது இதற்கு விடைகாண்பது அரிது எனலாம். இந்த உயிர் இருக்கிறதே, இது சிற்றறிவும், சிறுபொழுதும், சிறுதொழிலும் உடையது. இறைவன் ஒருவனே பேரறிவும், பெருந்தொழிலும் உடைய பரிபூரணன்; குறைவிலா மங்கலக் குணத்தன். இதனைச் சிவஞானமுனிவர்,

"குறைவிலா மங்கலக் குணத்தன் ஆதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்
இறையவன் பெருமையை யாவர் கூறுவார்"

என்று விளக்குகின்றார். உயிர் அவன் உள்நின்று உணர்த்தினால்தான் உணரும். உணர்த்தாவிட்டால் உணராது: உணருந் தன்மையும் அதற்குக் கிடையாது. இதனைக் குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,

"உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன்—உணர்த்தியென்னுட்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்து
ஆண்டருள்வை சொக்கநா தா"

என்று விளக்கியருளியுள்ளார்கள். பசுவுண்மை கூறவந்த மெய்கண்டதேவரும், "உணர்த்த உணர்தலின் மாயா வியந்திர தநுவினுள் ஆன்மா" என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார். உணர்த்தினால்தான் உயிர் உணரும் என்ற இயல்பினை விளக்க இத்தருமையாதீனத்திலேயே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகிறேன்போதும்.

4. இத்தருமையாதீனத்தில் நான்காவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகளின் காலத்தில் குமரகுருபர அடிகள் இங்கு வந்தார். திருவருள் நிரம்பப்பெற்றவராய் வந்த குமரகுருபர அடிகள் குரு உபதேசம் நாடி வந்தவர்கள்தாமே. அப்பொழுது குருமூர்த்திகள் அங்குக்கூடியிருந்த அடியார் பெருமக்களுக்குப் பெரியபுராணத்தில்வரும் '' ஐந்துபேரறிவும் '' என்ற பாடலுக்கு அநுபவப் பொருள் சொல்லத் தொடங்கும் நேரம். திருவருளைத் தேக்கிவரும் குமரகுருபர அடிகளைக் கண்டதும் அப்பாடலுக்குத் தாம் கூறத் திருவுளங்கொண்ட அநுபவப்பொருள் சொல்ல வருமா என்று கேட்டருளினார்கள். வாக்குத் தடைப்பட்டது. ஆசாரியன் திருவருள் வெளிப்பட்டது. அநுபவப்பொருள்கேட்ட குருமூர்த்திகளின் திருவடிகளில் வீழ்ந்தார் குமரகுருபர சுவாமிகள். உணர்த்தில் உணரும் உயிரின் தன்மை இன்னதென இவ்வாறு குருமூர்த்திகள் விளக்கிவிட்டார்கள்.

இந்த நிலையில் இன்று பதினறுபேர் வாழ்த்தியது சோடசாட்சர மந்திரத்தை உணர்த்திற்று. அம்மந்திரத்தால் திருவருட் சக்தியாகிய பராசக்தியை வழிபடுதலைத் தவிர வேறொன்றும் நமக்குப் புலனாகவில்லை. பழுத்த அனுபவவாதிகளாகிய சுப்பராயன், பி. டி. இராஜன் முதலிய நல்லோர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். ' கமலைஞானப்பிரகாசன் அடியார் ' என்று பேர்படைத்துள்ளதோடு மட்டுமின்றிக் குருவருள் வெள்ளத்தில் திளைத்துள்ளீர்கள். முன்னே குறிப்பிட்டதுபோல - ஞானக்குழந்தைக்குப் பாராட்டுச் செய்ய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து திரண்டிருக்கிறீர்கள். ஆயிரமானாலும் மாயூரம் ஆகாது எனச் சிறப்பிக்கப்பெற்ற மாயூரம் அன்பர்களும், மற்ற நாட்டுப் பகுதிகளில் வாழும் அன்பர்களும் திரண்டுவந்துள்ளீர்கள். இமய முதல் குமரிவரை இங்கே காணலாம். பாண்டிநாடு வந்திருக்கிறது. சோழநாடு வந்திருக்கிறது. கொங்குநாடு வந்திருக்கிறது. சேரநாடு வந்திருக்கிறது. இவ்வாறு எல்லாரும் சேர்ந்து செய்யும் இந்தப் பாராட்டை - பெருஞ் சிறப்பை எங்கள் ஆதி பரமாசாரியரின் திருவடிகளுக்கு அர்ப்பணிப்பதைத் தவிர வேறு என்செய இயலும். இந்த விழாவே ஞானசம்பந்தப் பெருமானின் திருவிழா ; குருஞானசம்பந்தப் பெருமான் திருவிழா.

வாழ்க்கையில் எவ்வளவோ காலத்தை வேவ்வேறு உலகியல் துறையிற் செலவழித்து வருகிற நமக்கு இதுபோன்ற

நல்ல அருளியல் துறையில் காலத்தைக் கழிப்பது மிகவும் அருமையாகத் தோன்றக்கூடும். இதுவே பயனுள்ள நற்பொழுது ஆகும். இந்த நற்பொழுதிலே இந்த விழாவின் ஞாபகார்த்த மாக இதனை என்றென்றும் உலகம் நினைந்து போற்றி இன்புற வேண்டும் என்று எண்ணித் திருவருள் துணையால், சைவ சித்தாந்த வளர்ச்சிக்காக ஒரு கல்லூரியைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். குருஞானசம்பந்தப் பெருமான் திருவருள் துணையைக்கொண்டு உங்களுடைய அன்பினால் இக்கல்லூரியின் அடிப்படைக்கல்லை, உடல் பொருள் ஆவி மூன்றாலும் தமிழுக்கும், சமயத்துக்கும் நற்பணி புரிந்துவரும் காசிவாசி அருணந்தி தம்பிரானின் நல்வாழ்த்துடன் பாரதநாட்டமைச்சர் கனம் சுப்பராயன் நாட்டிவைத்தார்கள். இந்தச் சைவ சித்தாந்தக் கல்லூரி குருஞானசம்பந்தப் பெருமான் திருவருளாலும், அன்னை பராசக்தியின் நல்லருளாலும் இவ்வாதீனத்தில் தொடங்கப்பெற்றுள்ளது. உங்களுடைய பேரன்பினால் இக்கல்லூரிநின்று நிலவி நீடும்பணிகள் பலபுரிய நீங்களெல்லாம் துணைநிற்க வேண்டும்.

மதுரையிலே, எம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருப்பணி நடந்து வருகிறது. அந்தத் திருப்பணித் தலைவர் வள்ளல் P. T. இராஜனும், அப்பெருமானை முப்பொதும் திருமேனி தீண்டி வழிபட்டுவரும் சிவதருமபாஸ்கர் பட்டரும் இங்கே இருக்கின்றார்கள்.

அந்தத் திருப்பணிக்கு இருபத்தையாயிரம் உதவ முடிவு செய்துள்ளோம். கனகத்தினைச் சைவ சித்தாந்தக் கல்லூரிக்கு என்று ஆக்கவிழைகின்றோம். நம்முடைய நாடும், நம்முடைய மொழியும், நம்முடைய சமயமும், நம்முடைய மதமும் முன்னேற வேண்டுமானால் நாமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்துதான் தொண்டு செய்யவேண்டும். அதற்கு நாம் நம்மைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஈத்து உவக்கும் இன்பம்தான் உலகிலேயே சிறந்த இன்பமாகும். பழங்காலத் தமிழர் வாழ்வு சேர சோழ பாண்டியர் காலத்திலே எப்படியிருந்ததென்று எண்ணிப் பாருங்கள். துன்பம் வந்தபோதும் வறுமையுற்று வாடிய போதும் பிறர்க்கு உதவாமல் வாழ்ந்ததில்லை. விருந்தோம்பியே வாழ்வு நடத்தினான் தமிழன். திருவள்ளுவர்,

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு"

என்று அருளியுள்ளார்.

உள்ளன்பினாலே சில வார்த்தைகளை நாம் இங்கே கூற நேர்ந்தது. அருமைப் பிள்ளையின் மழலைக்குச் செவிசாய்த்து இன்புறும் பெற்றோர்களைப்போல நாம் கூறும் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு பின்பற்றவேண்டும். காலம் கடந்துவிட்டது. அதிகமாகப் பலவற்றைக் கூறவேண்டும் என்ற ஆசையும் உண்டு ; உணர்ச்சி உடைய நல்லோர்முன் கூறும் கருத்துக்கள் தாமே இனிது வளர்ந்து பெரும்பயன் அளிக்கும் என்றே விருப்பம். ஆனால் உங்கள் அன்பின் ஆழம், அன்பின் சிறப்புக் காரணமாகப் பேச்சு எழவில்லை. பதினாறு பேர் பேச்சினோடு, முப்பத்திரண்டு வாழ்த்துரைகளைக் கடந்து நிற்கும் நேரம் இது. தத்துவங்கள் என்னும் சோபானநிலையைக் கடந்துநிற்கும் கயிலாயபதியை இப்போது நாம் கண்குளிரத் தரிசித்து நிற்கின்றோம் அல்லவா ?

நம் செந்தமிழ்ச்செல்வர் கி. வா. ஜகந்நாதன் ஞான சம்பந்தப் பெருமான் அடையாத கயிலையங்கிரியைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அடைந்து மீண்டார்கள் என்று கூறினார்கள். நம்முள்ளம் நடுங்குகிறது. ஞானவேந்தராக - ஞானச் செல்வராக உள்ள திருஞானசம்பந்தப் பெருமானால் இயலாத ஒன்றை அல்லது அடையாத ஒன்றை நாம் பெற்றதாகக் கருதுவதும் பிழையேயாகும். ஆனால் ஓர் அமைதி. குமரகுருபர சுவாமிகள் இவ்வாதீன நான்காவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்மீது பாடிய குருதோத்திரமாகிய பண்டார மும்மணிக்கோவையில் காழித் திருஞானசம்பந்தரும் தருமைக் குருஞானசம்பந்தரும் வேறுவேறு அல்லர். இருவரும் ஒருவரே என்று கூறியுள்ளார்கள். அப்பகுதி செந்தமிழ்ச்செல்வர் கூறும்போது உள்ளத்தில் எழுந்தது. "அமண்மாசறுத்து கவுணியர் பெருந்தகை பிள்ளைமைவிடுத்துத் தள்ளரும் பருவத்து உள்ளதன்படிவம் உணர்த்துவ" தற்கென எழுந்தருளினார் என்று உரைத்துள்ளார்கள். காழி ஞானசம்பந்தரே இளமை மாறி முதுமைக்கோலம் பூண்டு குருஞானசம்பந்தராக அவதரித்தார்

என்று கூறியருளுகின்றார்கள். இங்கே இராமசாமி ராஜா அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரைப்பற்றி அழுத்தமாகக் கூறினார். உண்மைதான்; குமாரசாமி ராஜாவும் சொல்லிக்கொண்டேயிருந்த உண்மை இது. சோழநாட்டிலே அவதாரம் செய்த ஒரு ஞானசம்பந்தப் பெருந்தகையார் பாண்டிநாடு சென்று ஞானப்பயிர் வளர்த்தார்கள். பாண்டிநாட்டிலே அவதாரம் செய்த ஒரு ஞானசம்பந்தப் பெருந்தகையார் சோழநாட்டிற்கு வந்து அருள்விளக்கம் கண்டுள்ளார்கள். அப்பெருமான் திருக்கோயிலை இன்று காலையில் தரிசனம் செய்திருப்பீர்கள். பரம ஞானியாகிய குருஞானசம்பந்தப் பெருமானார் ஞானவிளக்கம் கண்டு உபதேச பரம்பரையிலே இவ்வாதீனத்தை நிறுவியருளினார்கள். இத்தகைய ஞானிகள் வாழ்ந்ததால் நாடு நாடாக இருக்கும்; செம்மையான வாழ்வு செழிக்கும் என்பது நம் ஆன்றோர் கண்ட ஒரு முடிவாகும்.

அங்கே - பாண்டிநாட்டிலே தாமிரபரணி; இங்கே சோழநாட்டிலே - காவிரி; சோழநாடு சோறுடைத்து; பாண்டிநாடு முத்துடைத்து என்ற சிறப்புப் பெற்றவை. சோழநாடு சோறு உடையது என்றால் உடல் வளர்க்கும் சோறு என்பதுமட்டுமல்ல. உயிர்க்குச் சோறாகிய முத்தியையும் குறிக்கும். இம்மை மறுமை இரண்டிற்கும் உதவும் திருநாட்டிற்கு ஞானம் வழங்கியருளினார்கள் குருஞானசம்பந்தப் பெருமான். அப்பெருமானுடைய திருவருளே செந்தமிழ்ச்செல்வர் பேசியபோது இவ்வருட்சிந்தனையை நம்முள்ளத்தில் தோற்றுவித்தது.

நாம் செய்த கயிலாய யாத்திரையின்போது திருமுறைகளுடன்தான் யாத்திரை செய்தோம். இங்கே அருணந்தித் தம்பிரான் குறிப்பிட்டதுபோல, அத் திருமுறைகளையே உயிர்த்துணையாகக்கொண்டு திருக்கயிலாயகிரியிலே யாத்திரை புரிந்தோம். அழியாப்பொருளாகிய திருமுறைத் திருநூலையும், அழியும் பொருளையும் ஒரு பெட்டியில் வைத்திருக்கச்செய்திருந்தோம். யாத்திரையில் அந்தப்பெட்டி பனி ஆற்றில் தவறிவிழுந்துவிட்டது. உடன்வந்தவன் பெட்டி விழுந்துவிட்டது எனக் கூறினான். "பெட்டி போனால் போகட்டும்; உள்ளுறு பொருளாய் நம் உயிர்த்துணையாக உள்ள திருமுறைக்கு ஊறு ஒன்றும் வரக் கூடாது" என்று கூறினோம். திறந்துபார்த்தபோது, அழியும் பொருளாக உடன் இருந்த ரூபாய்நோட்டுகள் அனைத்தும்

நனைந்துவிட்டன. ஆனால் அந்த அடங்கன்முறையிலே மட்டும் ஒரு சிறு துளிகூடப் படவில்லை. நம் உணர்ச்சிக்கு உணர்ச்சியாக உள்நின்று துணைபுரியும் கயிலாசபதியின் திருவருளை என்னென்று உரைப்பது ! அடங்கன்முறையைத் தலைமேற் சுமந்துகொண்டு பெருமான் திருவருளை வியந்தவாறு நின்றோம் அக்கயிலைத் திருமண்ணிலே. அப்பொழுது ஒரு நினைவு வந்தது, ஞானசம்பந்தப்பெருமான் வைகையிலே இட்ட ஏடு எதிர்த்து சென்றது திருவேடகத்திலே என்கிறார்களே ! நமக்கே இவ்வாறு சில திருவருட்குறிப்புக்கள் சூசகமாக நிகழும்போது ஏன் அவையெல்லாம் நடந்திருக்கமுடியாது என்ற தெளிவும் பிறந்தது. அவ்விடத்துச் சேக்கிழார் சுவாமிகள்,

'' திருவுடைப் பிள்ளையார்தம் திருக்கையால் இட்டஏடு
மருவிய பிறவியாற்றின் மாதவர் மனம்சென்றாற்போல் ''

என்று பாடும் பகுதியை வெளிப்படையாகப் பாடிவிட்டோம். கயிலாய யாத்திரையிலே திருமுறை துணைநின்று திருவருள் உறுதிவிளக்கம் காட்டிய இந்நிகழ்ச்சி என்றும் மறவாத அரிய மெய்ப்பொருட் காட்சியென்றே கூறவிரும்புகின்றோம்.

மற்றுமொரு காட்சி; அடியார்கள் பசியால் வாடும்போது கட்டுச்சோறு கொடுக்கும் திருவருட்திறத்தை நம் அடியார்கள் வரலாறுகளிற் காண்கின்றோம். இறைவனது இப்பேரருளுடைமையைக் கயிலாயயாத்திரையில் மானசசரோவரக்கரையிலே நாம் கண்டோம். முதல்நாள் உடன் வந்திருந்த தேசிகர் சீனக்காரன் வருகின்றான்; வந்தால் தொல்லை நிச்சயம் என்றார். '' கயிலாயத்துக்கு வந்து இந்த உடல்போனால் என்ன நஷ்டம், வருவதுவரட்டும் '' என்றோம். ஆனால் மறுநாள் பன்னிரண்டு மணிக்கு இதுபற்றிப் பேசலாம் என்றும் கூறினோம். தேசிகர் மற்றவரிடம் '' நாம் சொல்லுவது என்ன? மகாசந்நிதானத்தில் உத்தரவாவது என்ன? ஒன்றும் புரியவில்லையே '' என்று கூறியது நம் செவிகளில் விழுந்தது. மறுநாள் பொழுது புலர்ந்ததும் எங்களுடன் கொணர்ந்திருந்த பொருள்களையெல்லாம் கொண்டு பண்டாரா (அடியார் விருந்து) செய்யுமாறு குறிப்பிட்டோம். அப்போது திபேத்தியன் ஒருவன் வந்தான். '' தயிர் இருக்கிறது ; வாங்கிக்கொள்ளலாம் '' என்றான்,

நினைக்கக்கூட முடியாதசெய்தி. கயிலாயத்திலே-மானசசரோவர்க் கரையிலே தயிர். இறைவன் பரமகருணாநிதியல்லவா? சோழ நாட்டிலிருந்து வந்தவன் தயிர்ச்சோறு உண்ணக்கூடியவன்; அவனுக்குத் தயிர் கொடுக்கவேண்டுமென்று உண்ணின் றுணர்த்தியே இதனை நிகழ்வித்தான். நமக்கு எவ்வெவ்வா றெல்லாம் உடனாய் நின்றும் வேறாய் நின்றும் அருளுகின்றான் என்று எண்ணிப்பார்த்தால் அது உணர்ச்சிக்கு எட்டக்கூடிய விஷயம் அல்ல. அநுபூதியாகக் காணக்கூடிய காலத்திலே தான் உண்மை தெளிவாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் உள்ளன்பு நிறைந்த உத்தமர். அப்பெருமான் கயிலாய யாத்திரை அநுபவங்களைத் தம் பதிகத்துக் கூறியருளுகின்றார். கயிலையங்கிரியிலே என்னென்ன நிகழ்கின்றது? அவற்றை எப்படி யெப்படியெல்லாம் அநுபவித் தார் என்று கூறியிருக்கிறார். சிரமலியானை தந்தான் நொடித் தான்மலை உத்தமன். அந்த வெள்ளையானையின்மீது சென்று கொண்டிருக்கும்போது வானவர் வரவேற்பு உபசாரம் முதலிய அனைத்தையும் விளக்குகின்றார். அரவொலி, ஆகமஒலி, அறிவார்அறி தோத்திரங்கள் விரவிய வேதஒலி அனைத்தும் எழுந்தன. விண்ணெலாம் வந்து எதிர்ந்திசைத்தன என்கின்றார் கள். வெள்ளானையில் பெருமான் சென்றார் என்ற செய்தியைக் கேட்டதும் வெள்ளானை என்ற ஒன்று இருந்திருக்கமுடியுமா? என்று சிலர் கேட்கலாம். ஆனால் 1961 ஆம் வருஷத்திலே வெள்ளானை ஒன்று இருப்பதாகச் செய்தித்தாளின் வாயிலாக அனைவரும் அறிந்திருப்பீர்கள். அப்படியாயின் அந்தக்காலத் திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஏன் வெள்ளானை வந்திருக்க முடியாது என்று சிந்திக்கவேண்டும்.

'மண்ணுலகிலே பிறந்து வாழுபவர்க்கெல்லாம் கயிலாயம் செல்லுவதென்பது அத்துணை எளிதல்லவே, என நினைத்தது தவறல்லவா? அது என்போன்ற எளியவர்களுக்குக் கிடைக் கிறதே' என்று எண்ணுகின்றார். 'உம்மை வாழ்த்தும் வழியடி யார் பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டேன்' என்று பெருமிதத்துடன் கூறியருள்கின்றார். அதுமட்டுமோ? முன்னே குறிப்பிட்டபடி அங்கே அரவொலி ஆகமங்கள் முதலிய ஒலிகள் எழுந்தன என்கின்றார். தென்மொழி, வடமொழி என்ற

பேத உணர்ச்சிக்கே இடமில்லை அங்கே. பார்த்தீர்களா? பேதங் கடந்த பிரான் வீற்றிருக்கும் இடத்திலே பேதஉணர்ச்சிக்கே இடமில்லை என்பதை இங்குச் சுட்டி உணர்தல் வேண்டும். இவ் வரிய கருத்துக்கள் பொதுளிய பாடல்களின் அருணலம் கெழு மிய முழு உருவத்தையும் காணுங்கள்:

"மண்ணுலகிற் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்றுகண்டொழிந்தேன்
விண்ணுலகத் தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே"

"அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே."

இவ்வாறே சேரமான் பெருமாள் நாயனாரும் திருக்கயிலாயம் சென்றார்; திருக்கயிலாய ஞானஉலா அருளி அங்கே சிவபிரான் திருச்செவிகள் கேட்பித்தார் எனக் காண்கின்றோம். அப் பெருந்தகையார்தாம் எத்தகையவர்? 'உலகியலும் அரசியலும் உறுதியல்ல என உணர்வார்' (சேக்கிழார் வாக்கு). உறுதியில் லாதவை எவை என்று உணர்ந்து, உறுதி உடைய பொருள் எது என்று பற்றிய பெருந்தகையார். உலகியலில் வல்ல அரசர் கூறுகிறார். அரசியல்வாதி கூறுகிறார் அரசியல் நிலையில்லாதது என்று. இதனைத்தான் நன்கு கூர்ந்து உணர்தல்வேண்டும். என்ன செய்தார் அத்தகு சேரலர் பெருமான்? சேக்கிழார் பெரு மானைக் கேட்கலாம். "புலரியெழுந்து புனல்மூழ்கி புனித வெண்ணீற்றிலும் மூழ்கி, நிலவுதிருநந்தனவனத்துள் நீடும் பணிகள்பல செய்து, மலரும் முகையும் கொணர்ந்து திருமாலைச் சாத்த மகிழ்ந்துவைக்கும்" திருப்பணி என்பார் சேக்கிழார். நமக்கு உலகியல் ஈடுபாடு இருக்கலாம். ஆனால் உலகியலில் ஈடுபட்டிருந்தாலும் நமக்கு ஆத்மார்த்தமான ஒன்றைத் தேட வேண்டும். அதைத் தேடிப் பற்றிக்கொள்ள வேண்டும். அதைச் சேரமான் பெருமாள் பற்றிக்கொண்டிருந்தார் என்று அறிதல் வேண்டும்.

கயிலாய யாத்திரை புரிந்த பெருமக்கள் அப்பர் சுவாமிகள், காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனார் முதலிய ஆசாரியப் பெருமக்கள்.

யாத்திரை அருள்துணை நின்ளுல் நன்கு நிறைவேறும் என்பது துணிவு. அந்தச் சான்ருேர் சென்ற நெறி நிற்கும் நமக்கும் இக்கயிலாய யாத்திரைப் பேறும், ஸ்ரீ கயிலாயபதி தரிசனமும் கிட்டின. அந்த அநுபவம் சொல்லி இன்புறுவதும் இன்புறுத்துவதுமாகிய நிலையிலே வைத்தெண்ணப்படக்கூடிய ஒன்றன்று. எண்ணி, எண்ணி, தேனித்து இன்புறவேண்டிய ஞான அநுபவமாகும்.

நீங்கள் நற்செயலை முன்னிட்டுக் கூடியுள்ள இந்நல்லிடத்திலே அவ்வநுபவத்தையும் இவ்வேளையிலே சிந்திக்கவேண்டும் என்று எண்ணினேம். பாருங்கள் ; இந்த மன்றம் இருக்கிறதே ; இதுவே திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம். "திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" என்ற ஞான சம்பந்தப்பெருமான் திருவாக்கு இம்மன்றத்தின் பெயர்க்காரணத்திற்கு அடிப்படையாய் நின்று நிலவுகிறது. இதனுலேயே இம் மன்றம் இத்திருவருளநுபவ விளக்கத்திற்கும் பொருத்தமான புனிதத்தன்மை உடையதென்பது புலனுகும்.

குருஞானசம்பந்தப்பெருமான் திருவருளாலும், சொக்கலிங்கப் பெருமான் நல்லருளாலும், இந்நற்செயல் புரிய நாடெங்கிலுமிருந்து வந்து கூடியுள்ள நல்லன்பர்களாகிய உங்களுக்கு நல்லன எல்லாம் பெருகுக என்று வாழ்த்துகிருேம். நம்நாடு தெய்வத்தமிழ் நாடாக, நம்நாட்டு மக்கள் தெய்வத்தமிழ் நாட்டு மக்களாக என்றும் விளங்குதற்கேற்ற நற்பணிகள் பலவற்றை நாடோறும் புரிந்து வாழ்க என்று வாழ்த்துகிருேம்.

"சித்தி தருநாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்தி தருநாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங்குருநா தன்."

நமப் பார்வதீ பதயே !

ஹரஹர மகா தேவா !!

இந்திய அரசாங்கப் போக்குவரத்து அமைச்சர்,

கனம். டாக்டர். P. சுப்பராயன் Bar-at-law

அவர்கள் ஆற்றிய

பாராட்டுரை

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களே! நண்பர்களே! எதற்காக என்னை இங்கு வரவழைத்தார்கள் என்பது என் மனத்திலுள்ள ஒரு சந்தேகம். ஏனென்றால் நான் இதற்குப் பொருத்தமானவன் அல்ல என்பதுதான் என்னுடைய எண்ணம். கல்வியிலோ வேறு எந்தச் சிறப்பிலோ நான் சிறந்தவன் என்று எந்நாளும் நினைத்தது கிடையாது. ஆகையினால் அன்பர்களுடைய-எனது நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கித் தான் இங்கு வந்திருக்கின்றேன். வேலை அதிகம் இருந்ததனால் இங்கு வருவது கஷ்டமாக இருக்குமென்று என் நண்பர் தாணுப் பிள்ளை அவர்களிடம் பலவாறு மன்றாடிப் பார்த்தேன். ஆனால் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு பெரிய கஷ்டநிலையில் என்னைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார். நண்பர் என்று நினைத்தேன் ஒரு காலத்தில். இல்லையென்று எண்ணலாமோ என்று எண்ணவும் இருக்கின்றது இப்போழுது. ஏனென்றால் நான் அவ்வளவாகப் படித்தவன் என்று சொல்லிக்கொள்ள முடியாது. அதுவும் நமது தமிழ்நாட்டில் பண்புள்ள இடத்தில்-தருமபுரமடத்தில் பேசவேண்டுமென்றால் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கிறது. ஆனால் குருமகாசந்நிதானம் அவர்கள் நமது நாட்டிற்குச் செய்துள்ள சேவையைப் பாராட்டவேண்டுமென்றுதான் நான் இங்கு வந்துள்ளேன். அவர்கள் நமது நூல்களுக்கு எவ்வளவோ அரிய பணியாற்றியிருக்கின்றார்கள். எல்லோருக்கும் இலவசமாகக் கிடைக்கும்படியாக நூல்களை அச்சிட்டு வழங்கி வருகின்றார்கள். இதுவே ஒரு பெரிய காரியம்.

நமது தமிழ்ப்பண்பு நீடூழி வாழவேண்டுமென்றால் நமது தமிழ்மக்கள் இவைகளைப் படித்து நன்றாக அறிந்து, அதிலுள்ள நுட்பங்களைக் கற்றுக்கொண்டால்தான் நமது தமிழ்நாடு மேலே போகலாம். ஏனென்றால் பழையமுறையையே வைத்துக்

கொண்டு எல்லாம் முடிந்துவிடுமென்று இந்த அணு சகாப்தத்தில் நினைப்பது தவறு. உலகம் வெகுவேகமாக ஓடிக்கொண்டேயிருக்கிறது இப்போழுது. அவ்வாறு செயற்படுவதனுல் குறுகியும் வருகின்றது இப்போழுது.

50 வருஷங்களுக்கு முன்னுல் நான் லண்டன் போகும் சமயத்தில் ஒருவருக்கு 15, 16 நாட்கள் ஆயின. ஆனுல் அது குறுகிய காலம் என்றுதான் அப்போழுது நினைத்தார்கள். ஏனென்றுல் ஆங்கிலேயர்கள் நமது நாட்டிற்கு வர்த்தகம் செய்ய வந்தார்கள். அந்தக் காலத்தில் ஆங்கிலேய நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வருவது மூன்று மாதங்கள் ஆகும். ஆனுல் விஞ்ஞானம் முன்னேறிவிட்டதால் கப்பல் வழியாக வந்தவர்கள் இப்போழுது பம்பாயை விட்டு 1 மணிக்கு புறப்பட்டால் 11 மணிக்கு லண்டன்மாநகரமே சேர்ந்துவிடலாம். அது எப்படியென்று நினைக்கின்றீர்கள். பிறர் ஓட்டும் வாகனம் அல்ல; அது நம் நாட்டைச்சேர்ந்த வாகனமே; அவ்வளவு தூரம் உலகம் குறிகியும் வந்திருக்கின்றது வேகத்தால். ஆனுல் பயங்கரமான செய்திகளும் உலகத்தில் இப்போழுது நடக்கின்றன. அணுசகாப்தம் என்று சொன்னேனே; இந்த அணுவை மனிதனுடைய நன்மைக்காக உபயோகிக்கலாம். ஆனுல் இப்போழுது எப்படி உபயோகிக்கின்றுர்கள். ஒருவனை ஒருவன் எப்படிக் கொலைசெய்வது என்று நினைத்து உபயோகிக்கின்றுர்கள். அதற்குக் காரணம் என்ன? நம் நாட்டின் சுதந்திரத்தைப் பெற்ற தகப்பனே (மகாத்மாகாந்தி) சொல்லிப் போய் இருக்கின்றுர். பயம்தான் காரணம். மற்றவன் நம்மை மீறி ஏதோ ஒரு புதிய ஆயுதம் கண்டுபிடித்ததால் நமக்குமேல் போய்விடுவானே என்ற பயத்தினுல்தான் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஜனங்களை அழிக்கும் கருவிகளை இப்போழுது செய்கின்றுர்கள்.

இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னுல் ருஷ்யநாட்டுக்காரர் ஒரு நாயை ராக்கேட்டில் உலகமே சுற்றிவரச்செய்து திருப்பிக்கொண்டு வந்துவிட்டார். அதைப் பார்த்து அமெரிக்கர்கள் நினைக்கின்றுர்கள். ஏதோ இதில் ஒரு சூது இருக்கும்போல் இருக்கின்றது. நாய் மாத்திரமல்ல. உலகத்தைச் சுற்றி ஒரு பெரிய ஆயுதத்தை வீசி நமது நாட்டையே அழித்துவிடுவார்களோ என்று நினைக்கின்றுர்கள். அதற்காக நாம் என்னசெய்ய

வேண்டும். எந்தக் கருவியைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று நினைக்கின்றார்கள். இத்தகைய காலத்தில் நம் நாட்டில் இம்மாதிரி சந்நிதானம் போன்றவர்களும் இருக்கிறார்கள் என்பது தான் நமக்கு ஒரு நம்பிக்கை; சந்தோஷம். ஏனென்றால் அழிப்பதற்காக அல்ல. ஆக்குவதற்காக ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் போன்றவர்களும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இருக்கின்றார்கள். ஜனங்களுக்கு நல்ல வழியில் எப்படிப் போகலாம், எந்தவிதத்தில் போகலாம் என்று ஊக்குவதற்காகத்தான் இவர்கள் இருக்கிறார்கள்.

நம் நாட்டில் இன்னும் இந்த ஆத்மீகத்தொடர்பு விட்டுப் போகவில்லை. இது நமக்கு ஒரு மகிழ்ச்சிதரும் செய்தி; ஏனென்றால் இம்மாதிரி சகாப்தத்தில் ஒருவனை ஒருவன் அழிக்கும் எண்ணத்தில் இருக்கும் சமயத்தில் நம்நாட்டில் இம்மாதிரி சான்றோர்கள் இருக்கின்றார்கள். சான்றோர்கள் வழியாக நாம் கற்றுக்கொள்ளப் போகின்றோம். எல்லா மனிதர்களும் ஒன்று தான் என்பது நம்முடைய எண்ணம். தமிழ்நாட்டின் பண்பாடு அது. ஏதோ பல காரணங்களால், நாம் பிரிந்ததுபோல இருக்கிறது. ஜாதி மத மொழி பேதமெல்லாம் பார்த்துவருகின்றோம். இருந்தாலும் நமது தமிழ்நாட்டின் பண்பைப் பார்த்ீர்களே யானால் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரே உலகம் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள் நமது தமிழ்க்கவிகள். அது மறுபடியும் உலகத்தில் பரவ இருக்கின்றது. இக்காலத்தில் அதற்குக் காரண புருஷர் நமது நாட்டின் பிரதமர் ஜவாஹர்லால்நேரு என்பதையும் மறந்துவிடாதீர்கள். மனிதகுலம் எல்லாம் ஒன்று என்ற ஒரே எண்ணம்தான் அவருக்கு. எப்பொழுதும் அது தான் அவருடைய மனதில் இருந்துவருகின்றது. உலகமே ஒன்றுகூடி சண்டை சச்சரவு இல்லாமல் அமைதியே நிலவ வேண்டும். மனிதவாழ்வு உயர்வாழ்வாக இருக்கவேண்டும். அதுதான் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமெல்லாம் நமக்குக் கற்றுக் கொடுப்பது. அதைத்தான் உலகத்துக்கே புகட்டிவருகின்றார் தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்களும்.

இம்மாதிரி பெரிய மகான்களும் நமது நாட்டில் இருக்கின்றார்கள். நாம் என்ன நினைக்கின்றோமோ, அதைச் செயலில் காட்டுவதற்காக இருக்கின்றார்கள் என்பது அவருக்கு மிகவும்

ஆனந்தமாக இருக்கும். ஆகையினுல் மனித வாழ்க்கை உய்ய வேண்டுமேன்ருலும் நாடோ உலகமோ உய்யவேண்டு மேன்ருலும் மனிதகுலம் ஒன்று என்ற எண்ணத்தில் எல்லா மனிதர்களும் இருந்தால் தான் முடியும் காரியம் அது. உண்மையே கடவுள் என்று காந்திஜி சோல்லிப்போனுர். அதைத்தான் நமது தமிழ் நாட்டில் எப்போழுதும் போற்றி வந்திருக்கின்ருர்கள். உண்மை, சத்தியம் என்று நாம் நினைத்துக் கடைப்பிடித்தோமேயானுல் மனிதருக்குள் பகையே வேண்டுவது இல்லை. அதை வைத்துக்கோண்டே எல்லோருட னும் சகஜமாக நாம் வாழலாம். அந்த வாழ்வு வரும் காலம் தான் நன்னுள். அதற்காகத்தான் கயிலையங்கிரி வரையிலும் போய் நமது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நமது நாட்டில் இருக்கும் ஜனங்கள் எப்படி வாழ்கின்ருர்கள் என்று பார்த்து வந்திருக்கின்ருர்கள். இதிலிருந்து நமது மனிதவர்க்கம் எப்படி உய்ய முடியும், என்பதை நினைத்து, சேல்லுமிடமேல்லாம் சோல்லாலும் சேயலாலும் மக்கள் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உபதேசித்து வருகிருர்கள். அப்படி அவர்கள் அதற்கு வேண்டிய காரியங்களை சந்நிதானங்கள் எல்லாம் சேய்தால்தான் நாமும் வாழலாம். உலகமும் வாழலாம். ஈசன் அருள்வானுக.

முருகன் துதி

வேளூர், க. சோக்கலிங்கம்.

இராகம் - சங்கராபரணம்] *[தாளம் - மிஸ்ரம்*

பல்லவி

முத்துக்குமரனே முக்கணன்மகனே
நித்தலும்உனையேநான் நினைந்திடுவேனேசேல்வ (முத்துக்)

அனுபல்லவி

எத்திசையும்புகழ் வேளூர்ப்பதிவாழ்
உத்தமனேஅடியார் உளம்உறைவோனே (முத்துக்)

சரணம்

உய்யும் நேறியருள வல்ல பிரானே
வையம் வணங்கும்படி வேலவனே குகனே
ஐயனே மேய்யனே ஆறிரு கையனே
தையல் நாயகிமனம் மகிழும் சரவணனே. (முத்துக்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு

12—3—61 ஞாயிறு காலை 11 மணிக்கு நிகழ்ந்த கனகாபிஷேகத் திருவிழாவில்

விழாக் குழுவினர் வாசித்து அளித்த

போற்றியுரை

சேந்தமிழ் வல்ல சுந்திர மூர்த்தியே, திருவடி போற்றி. நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தர் தாம்பெற்ற சிவானந்தத்தை வையகத்தாரும் பெற்று இனிதுவாழ அடியார் கூட்டத்தோடு தலமெங்கும் சென்று நலமெல்லாம் நண்ணு வித்தார். குருஞானசம்பந்தர் அருள்வழித் தோன்றலாகிய இந்த மகாசந்நிதானமும் அடியார் கூட்டத்தோடும் இந்திய நாடெங்கும் ஏகி, இறைவன் திருக்கோயில் பலவும் வழிபட்டும் வழிபடச்செய்தும் பலரைத் திருநெறியில் ஒழுகச் செந்தருளியது உலகறிந்த உண்மை. இதனை உன்னும்தோறும் எல்லாரும் இன்பமும் இறும்பூதும் எய்திக் களிக்கின்றனர். வாழ்க! கயிலைக் குருமணி.வடமொழி அறிவுசால் வாகீசமூர்த்தியே! மலரடிக்கு வணக்கம்.

குருமகாசந்நிதானம் குருபீடத்தை அணிசெய்தும் செய்வித்தும் உதவிய நலங்களுக்கு அளவே இல்லை. திருக்கோயில் திருப்பணிகளும், மகாகும்பாபிஷேகங்களும் ஆங்காங்கு ஏற்படுத்திய, கலாநிலயங்களும் விளங்கிக் கொண்டு நிலவுகின்றன. நித்திய நைமித்திய பூசைகளும் திருமுறைப் பாராயணங்களும், வேதாகம பாராயணங்களும் ஆயிரம் லட்சம் கோடியர்ச்சனை களும் குருமகா சந்நிதானத்தின் திருவுள்ளத் தேழுந்தே உலகிற் பரவின. பணிவார்க்கு அருளும் மணிவாசக மூர்த்தியே! சேவடியிணைக்கு வணக்கம்.

சிவ ஞான போதம்

கட்டுரை 27

சித்தாந்த சிரோமணி, சித்தாந்தரத்நாகரம்,
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
முதல்வர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

(மலர் 20, இதழ் 4, பக்கம் 212 இன் தொடர்பு)

முன் அதிகரணத்தில் 'எனதென்ற மாட்டின்' என்பதனை எனது மாடு என்றலின் என்றுகொண்டு, என் செல்வம் என்றாற்போல எனப் பொருளுரைத்தல் வேண்டும். மூல வாக்கியத்தில் 'என்பதி, என்மனைவி என்றாற்போல' என்றுள்ளதால், அதையே எனது மாடு என்றாற்போல எனக் கருதி, வெண்பா அமைதிக்கேற்ப எனதென்ற மாட்டின் என்றார். வெண்பாக்கள் மெய்கண்டார் அருளியன அல்ல. வெண்பாவடிவில் அமைந்த நூல் தனிநூல். அது வழிநூல். இவ்வுண்மையைச் சிவஞான சித்தியார்க்கு மறைஞான சம்பந்தர் எழுதியவுரையாலும் அறியலாம். பலயாண்டின் முன் இதனை வெளியிட்டும் அறிந்தபாடில்லை. மெய்கண்டார் திருவாக்கின் பொருளையே உட்கொண்டிருக்கும் வெண்பாக்களை அவற்றிற்கு உதாகரணம் எனல் எவ்வாறு பொருந்தும்?

திருமூலதேவ நாயனாரும் ('செல்வம் நிலையாமை என்றதன்கீழ் 3)

" தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடுஎன் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காண்ஒளி கண்டுகொ ளீரே " (170)

இதில் மாடு என்றது செல்வத்தை. ஏழைகள் என்றது அறிவிலிகளை. வறியனுக்கு 'எனதுமாடு' என்ன வாய்ப்பு உண்டோ ?

'எனதேன்ற மாட்டின் எனதலா தேன்ஞது' என்ற தற்கு உரை :- ஒருவன் தன் போருளை எனது என்றலே அன்றித் தன் போருள் அல்லாததை எனதேன்ஞன். தனதைத் தனதேன்றும், தனதல்லாததைத் தனதன்று என்றும் சோல்வதே உண்மை வழக்கு. அதன்படி எனதுமாடு என்ருற்போல எனது அலாததை எனது என்ஞது உலகம். அதாவது (உலகம்) எனதை எனதேன்னும் ; எனதலாததை எனதேன்ஞது என்றதாம். அவ்வாறு இன்றி, நீ உன தல்லாத உன் கை கால் யாக்கை முதலியவற்றை(த் தனித் தனி) எனது எனது என்று சோல்லிக்கோள்கின்றனை. எண்ணிக்கோள்கின்றனை. உன்னில் - நினைப்பின், உன்னி னும் என்ற இருபோருளது.

" என்னுடல் போறிபி ராணன் கரணம்என் உணர்வேன் றக்கால்
தன்னின்வே ருகும் ; நீஎன் றன்மனை என்ற எல்லாம்
நின்னின்வே ருகும் ; என்னின் நீங்கிடா இவைஇங்கு என்னின்
உன்னின வாகும் நீஆம் உகிர்மயிர் உகவும் காண்டி.

போன்னணி ஆடை மாலை போதுமே லான போதிங்
கேன்னணி யான்என் றுன்னி இருந்தனை ; பிரிந்த போது
நின்னணி நீயும் அல்ல ஆயினை காயம் நின்னின்
அன்னியம் ஆகும் உன்னை அறிந்துநீ பிறிந்து பாரே ".

(சிவஞானசித்தியார்)

மூன்ருவது அதிகரணம்

" இனி ஐம்புலன் அறிதலின் ஆன்மாவுளது ; ஐம்புலனுகிய
சத்தப்பரிசருபரசகந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்தது
ஒன்றறியாமையின் இவ்வைந்தினுலும் ஐம்பயனும்
அறிவதுளது ஆகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது "

(சிவஞானபோதம்)

" ஐந்தையும் ஒருவனே அறிதலின் ஒவ்வோன்றைமாத்திரம்
அறிகிற ஐந்திற்கு வேருய் உயிர்உண்டு "

(சூர்ணிக்கோத்துரை)

" ஒன்றறிந்த தோன்றறியா தாகி உடல்மன்னி
அன்றும் புலன் ஆய்அவ் வஞ்சேழுத்தை—ஒன்றறிதல்

உள்ளதே ஆகில் அதுநீ தனித்தனிகண்
டுள்ளல்அவை ஒன்றல்லே ஓர் ” (சிவஞானபோத வேண்பா)

“ அறிவதைம் போறியே என்னின் உறக்கத்தின் அறியா வாகும்
அறிவதும் ஒன்ருேன் ருக ஒன்ருேன்ருய் அறியும் என்னின்
அறிவுகள் ஒன்றை ஒன்றங் கறிந்திடா ஐந்தை யுங்கோண்
டறிவதோன் றுண்ட தான்மா ஐம்போறி அறிந்தி டாவே ”

(சிவஞானசித்தியார்)

வினு :- ஐம்போறிகள் ஐம்புலன்களே அறியும் என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தமையின் அவை உடலைப்போல் சடம் அல்ல என்பது பேறப்படும். அவற்றை எனது எனது என்னும் வழக்கம் பேரும்பான்மையது அன்று ஆகும். ஆதலின் அவையே (ஐம்போறிகளே) உயிராதல் அமை யும், அவற்றின் வேருக உயிர் உண்டு என்பது எவ்வாற்ருல் போருந்தும் ? (இந்திரியான்மவாதிகள் கூற்று).

விடை :- ஐம்போறிகள் சடம் அல்ல என்றது மயக்கத் தாற் கோண்டதாகும். அவை சித்தாயின் தாமாக அறிய வல்லன ஆதல்வேண்டும். மற்ருேன்று அறிவதற்கு அவை கருவியே அன்றித் தாமே அறிவன அல்ல. குடம் முதலியன சேய்யக் கருவியான தண்டசக்கிரம் போல்வன அவை; குயவன் போல்வன அல்ல. குயவனேப்போல வினைமுத லாவது ஆன்மா. தண்டசக்கிரம்போலக் கருவியாவன ஐம்போறிகள். அதனுல் ஐம்போறிகளே ஆன்மா என்று (இந்திரியான்மவாதிகள்) கூறுதல் சிறிதும் உண்மையன்று.

வினு :- ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது என் பதை விளக்கிக் கூறுக.

விடை :- ஐம்புலன் சத்தப் பரிச ரூப ரச கந்தங்கள் (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்). அவற்றைப் போறி வழியாக ஆன்மா அறிகின்றது. 1 ஆன்மா, 2 போறிகள், 3 புலன்கள் என்று முத்திறம் உள்ளமை அறியத்தக்கது. ஆன்மாவின் அறியுந்தோழிலேப் போறிகளின்மேல் வைத்துப் போறிகள் அறிவன எனல் வழக்கம் ஆயினும், அவ்வழக்கம்

உபசாரமே அன்றி உண்மையன்று. அவ்வுபசாரவழக்கத்தால் 'இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்றறியா' என்கின்றனர். ஐம்புலனுகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங்கள் அறியுங்காலும், சேவியறிந்த ஓசையை ஏனைக் கண்ணோ பிறவோ அறியமாட்டா. கண் அறிந்த ஒளியைக் காதோ பிறவோ அறியமாட்டா. நாவறிந்த சுவையை மெய்யோ பிறவோ அறியமாட்டா. மெய்யறிந்த ஊற்றினை (ஸ்பர்ஸத்தை) மூக்கோ பிறவோ அறியமாட்டா. மூக்கறிந்த நாற்றத்தை நாவோ பிறவோ அறியமாட்டா. இந்திரியங்களுள் ஒன்றறிந்த புலனை மற்றோரிந்திரியம் அறியவல்லதன்று. இவ்வைந்து போறியாலும் ஐந்து புலனுய பயனையும் ஆன்மாவே அறியும். ஆன்மாவை அறியாத உனக்கு ஆன்மா என்று கூறல் போருந்தாது. அதனுல், 'இவ்வைந்தினுனும் ஐம்பயனும் அறிவது உளது' என்று அநாமதேயம் ஆக முன்னர்க் கூறி, 'அதுவே' என்று பின்னர்ச் சுட்டி, அவ்வான்மாவாம் என்று நாமதேயத்தைப் பண்டறி சுட்டுடன் விளக்கினுர் ஆசிரியர்.

'ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது' என்றதில் ஆன்மா என்று சோல்லியதால், அவ்வான்மா என்று சுட்டியுணர்த்தினுர். அது பண்டே அறிந்ததாயிற்று அன்றோ?

வினு :- இந்திரியங்களுள் ஒன்றறிந்ததை மற்றோன்றும் அறியாது என்றது உண்மைதான். ஐந்தும் ஐந்து உயிர் என்று கோள்ளும் எமக்கு அதனுல் ஓர் இழுக்கும் இல்லை. இவ்வைந்தனையும் கோண்டு ஐம்புலனையும் ஒரு போருளே அறியும் என்று நீ எப்பிரமாணத்தால் கூறுகின்றனை? யாம் அதற்குப் பிரமாணம் கண்டிலம். முதலில், குடத்தைக் கண்டேன் யான். பின்னர் யானே அதைத் தோட்டேன். கண்டயானே தீண்டினேன் என்று மறித்துணர்வு நிகழ்கிறது. காண்டல் கட்போறியின் பயன். தீண்டல் மெய்ப்போறியின் பயன். அக்கட்போறியின் காண்டலும் மெய்ப்போறியின் தீண்டலும் நிகழ்வது ஐந்தும் ஒரே உடம்பில் நிலைபேறும் ஒற்றுமையால்தான். ஐந்து போறியும் ஐந்து உயிராகக்கோண்ட எமக்குக் காண்டல்

தீண்டல் முதலிய ஐந்தும் நிகழ்தல் பொருந்தும். அவ்வைந்தினும் வேருய் ஒரு பொருள் உண்டு என்பதற்கு நீகொண்ட உனக்குப் பிரமாணம் என்ன ?

விடை :- உடலில் நிலைபெற்று ஒரு புலனைக் கவர்ந்த பொறி மற்ருெரு புலனை அறியாது ; ஐந்து புலனும் ஒன்றற்கொன்று மாறுபடுவன ; ஓசை முதலிய புலன்களை அறியும் செவி முதலிய பொறிகள் சூக்குமபஞ்சாக்கரத்தால் செலுத்தப்பட்டால் அன்றி அறியமாட்டா. சூக்குமபஞ்சாக்கரத்தால் செலுத்தப்பட்டு (ஐம்புலன்களை) ஆராய்ந்தறிகின்றமையே ஐம்பொறிகளின் தொழிற்பாடு. அச்சூக்குமபஞ்சாக்கரருபமாய் நின்று பொறிகளை ஏவிப் புலன்களைக் கவர்வது ஆன்மாவே.

வினு :- கண் உருவத்தை அறிவது, செவி ஓசையை அறிவது என்று இவ்வாறு உணர்தலை உடையது ஆகிய ஒரு பொருள் இல்லதோ ? உள்ளதோ ?

விடை :- இல்லது எனின் அவ்வறிவு நிகழாதாதல் வேண்டும். அறிவோ நிகழ்கிறது. அறிவின் நிகழ்ச்சியைப் பொய்யாக்க முடியாது. அதனுல் 'உள்ளது' என்றே இசைதல் வேண்டும். உள்ளது ஆகிய நிகழ்ச்சிகொண்டு, அங்கனம் அறிவது வேறு உண்டு. அதுவே பொறிகளைக் கருவியாகக்கொண்டு புலன்களை அறிகின்றது. அதுதான் ஆன்மா ஆகிய நீ.

வினு :- அவ்வாறு அறிவனவும் அப்பொறிகளே என்ருல் என்ன குற்றம் ?

விடை :- பொறிகள் தத்தம் புலன்களை வேறு வேறு கண்டறிதல் மாத்திரையே அன்றி இத் தொழிற்பாட்டை உடையேம் யாம் என்று அறியமாட்டா. ஆகலான், பொறிகளின் தொழிற்பாட்டை அறிந்து, அவற்றின்வரும் பயனைக் கொள்ளும் நீ அவற்றின் வேருவை. பொறிகளே அறிவன அல்ல. 'அஞ்சேழுத்தை' என்பது முன்னிலை வினைக் குறிப்பு. ஆன்மா என்னும் பொருட்டு, இதற்கு எழுதிய பொருளும் இலக்கணக் குறிப்பும் பொருந்தாமையை ஆய்ந்தறிக.

(தொடரும்)

உபயோகம் :

வடக்குமுகம் போகும் வேரை எடுத்து ஒரு பலம் தட்டி ஒரு கோப்பை தண்ணீரிலிட்டு கோதிப்பித்து ½ கோப்பையாக வற்றவைத்து நாட்டுமருந்து கடைகளில் விற்கும் பூங்காவி இருசிடிகைகள் அதிலிட்டு காலை இரண்டு அவுன்ஸ், மாலை ஒரு அவுன்ஸ் இப்படி இரண்டு நாட்கள் தர சித்தப்பிரமை (Hysteria) உடனே குணமாகும். வேண்டியதாயின் வாரத்தில் மூன்று வேளை தர பூரணகுணமாகும். இம்முறை பெரிய வைத்தியர்களால் இரகசியமாக வைக்கப்பட்டு வந்துள்ளது. இம்முறைப்படி மூன்று வேளைகள் 25 வயது பெண்களுக்குக் கொடுத்து பூரண குணமடைந்திருப்பது அநுபவம்.

வேறு :

இதன் கொட்டைகளின் சத்தை எடுத்து மேல்நாட்டார் எல்லா உடல்தேற்றி (Tanics) மருந்துகளிலும் கலக்கின்றனர். இக்கொட்டை உடம்பிலுள்ள பல வியாதிகளை நீக்குவதுமின்றி வெகுவிரைவில் காமஇச்சையைவளர்க்கும். ஆனல் ½ மண்டலத்துக்குமேல் சாப்பிடுதல் கூடாது. உடம்பில் ஒருவித உற்சாகத்தை ஊட்டவல்லது. பயித்திய ரோகங்களை நீக்கவல்லது.

எட்டிக் கொட்டைகளை 4 படி வாங்கி உலர்த்தி நெருப்பு வைத்து சுட்டு சாம்பலாக்கி, சாம்பலின் அளவுக்கு 4 பங்கு ஜலம் கூட்டி கரைத்து தெளிந்தபின், தெளிவிலிருந்து அத் தெளிவைக் காய்ச்ச உப்பாகும்.

இந்த உப்பு கீல்வாயு (Renmatism) பக்ஷவாதம் (Paralyisis) காக்கைவலி, பாம்புகடி, ஜலோதரம் (Asirtis) முதலிய வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

குறிப்பு :

இம்மருந்தில் பாஷாண சத்துள்ளதால் கடுகளவு உப்பிற்கு மேல் தரக்கூடாது. தேனில் கலந்து நாள் ஒன்றுக்கு ஒரு முறை பயமின்றி கொடுக்கலாம். 20 நாட்கள் கொடுத்து நிறுத்திக்கொள்ளவும். வியாதி அதற்கு முன்னுகவே குண மானல் உடனே நிறுத்திக்கொண்டு ஒரு வாரம் கழித்து உடல்

தேற்றுவதற்காக (As Tanic) 10 நாட்கள் கோடுத்து நிறுத்திக்கோள்ளவும். சரீரத்தில் வெகுவிரைவில் உற்சாகத்தை யூட்டும்.

வேறு :

இதன் இலைகளிலும் உப்பேடுத்து மேற்சோன்னபடி கோடுக்கலாம். ஆனால் இந்த உப்பை ½ அரிசியிடை காலை மாலை இரண்டு வேளைகளிலும் பயமின்றி கோடுக்கலாம். மேற் சோன்ன வியாதிகள் குணமாகும். உடல் தேறும். ஆயுள் நீடிக்கும்.

ருதந்தி கற்பம் 36.

இதற்கு உதந்தி என்றும் பெயறுண்டு. இதில் நான்கு விதமுண்டு. (வேண்மை, மஞ்சள், சிவப்பு, கருப்பு) இதில் எதுவானாலும் நன்று. அதனுடைய இலை சணம்புபோலே இருக்கும். இலையில் ஜலம் விழுகிறமாதிரி இருக்கும். இதைப் பூர்வபக்ஷத்தில் நல்ல தினத்தில் முறித்துக்கோண்டு வந்து நிழலிலுலர்த்திசூரணம் செய்து ஒருவேருகடிப்பிரமாணம் பாலும் நேய்யும், தேனும் கலந்துகோள்ளவும். உப்பு, புளி விடவும்.

இப்படி ஒரு மண்டலம் கோள்ள நரை திரை மாறும். ஆயுள் வர்த்திக்கும். சித்தனாகியிருப்பான். உதந்திசார் ரசத் தில் (Merenry) விட்டு மத்திக்க சாகும். அதைக் குகையி லிட்டு சீலமண் செய்து ஒரு புடம்போடக் கட்டும். நல்ல படிகம் போலிருக்கும். அதைத் தகடுதட்டுக்கோண்டு சேவ்வரளி வேரை அரைத்துத் தகட்டினால் பூசி மூன்றுபுடமிட முருக்கம்பூ போல் சிவக்கும். இதைக் கருப்பட்டியில் வைத்து உப்பு, புளி தள்ளி ஒரு மண்டலம் சாப்பிட நரம்புகள் முறுக்கேறி யானை யலமுண்டாகும். மன்மதனாவான்.

இந்தச் சாற்றை கந்திக்கு சுருக்குட கட்டும். கட்டிய கந்தகத்தை வேள்ளியில் தர தங்கமாகும்.

(தோடரும்)

தெளிவந்த தேறல்

வித்துவான், ப. நீலா

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்,"

திருவாசகம் பற்றி வள்ளலார் - வான்கலந்த மாணிக்கவாசகரின் வாசகத்தை, நான் கலந்து பாடும்போது நற்கருபஞ்சாற்றில் தேனும் பாலும், செழுங்கனித்தீஞ்சுவையும் கலந்து, ஊன் கலந்து, உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்றது என்கிறார்.

தேறலின் தெளிவு :

தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமானை மாணிக்கவாசகர் தெளிவந்த தேறலாகக் காண்கின்றார். தான் அடைந்த இன்பத்தை நாமுமடைதல் வேண்டித் தேனார் அமுதைத் திருவாசகத்தில் காட்டுகிறார்.

'தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான் தெளிந்த' இறை - வனின் கருணையைத் 'தேனிலாவிய திருவருள்' என்றும் 'கருணைவான்தேன்' என்றும் போற்றுகிறார்.

ஆனந்தத்தேன் :

'அந்த இடை மருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.' (13 - ௨)

பூவல்லி கொய்யும் பெண்கள் வாயிலும்கூட இறைவனின் பெருமையே வெளிப்படுகின்றது. தேன் என்று இறைவனைக் கூறியதால் அவனுறையும் இடத்தைப் பொந்து என்றார்.

---

13. திருப்பூவல்லி,

'தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய்க் கோத்தும்பீ' (10-3)

'ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த' (37-9)

செல்வனை வாயாரப் பாடுகின்றார்.

கொம்புத்தேன் :

வானவரு மறியா மலர்ப் பாதத்தானைக் கொம்புத் தேனாகக் கூறுகின்றார்.

'கோற்றே னெனக் கென்கோ குரை
கடல் வாயமு தென்கோ' (34-8)

என்கிறார். எட்டாத கொம்புத்தேனுக்கு முடவன் ஒருவன் ஆசைப்பட்டான்; உள்ளங்கையைக்குடைபோலாக்கிக் கீழிருந்த படியே மேலேயுள்ளதேன் கையில் வீழுவதாகப் பாவித்துத் தேனைச் சுட்டித் தன்கையை நக்கினானும்.

'குறுந்தாள் கூதளி யாடிய நெடுவரை
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கை சிறுகுடை கோலி கீழிருந்து
சுட்டுபு நக்கி யாங்கு' (குறுந்தொகை - 60)

முடவனைப்போல எட்டாத இறைவனை எண்ணியேத்துவதில் இன்பங் காண்கின்றேம்.

---

10. திருக்கோத்தும்பீ.
37. பிடித்தபத்து.
34. உயிருண்ணிப்பத்து.

கரும்புதருசுவை :

இறைவனது கருணை வெள்ளத்தில் பால், தேன், கன்னற் சாறு மூன்றும் கலந்துள்ளது என்கிறார். 'கரும்புதரு சுவை யெனக்குக் காட்டினை' என்றும், 'தேனே அமுதே கரும்பின் தெளிவே' என்றும், 'தேனைப் பாலைக் கன்னலின் தெளியை' என்றும் கூறுகிறார். இறைவனது கழல்களை 'தேன் வந்தமுதின் தெளிவின் ஒளிவந்த வான்வந்த வார்கழல்கள்' என்று பாராட்டு கிறார்.

"ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானை' (9 - 15)

மணிவாசகர் பள்ளியெழுப்புகிறார்.

"கண்ணகத்தே நின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும்படியார்
எண்ணகத்தா யுலகுக் குயிரானாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே" (20 - 9)

என்றும் பாடுகின்றார்.

கொங்குலவு கொன்றை :

கொங்கு என்பதற்கு மணம் - தேன் போன்ற பொருள்களு முண்டு. இறைவனது திருமுடியில் இருக்கும் கொன்றைகூடத் தேனிறைந்து விளங்குகின்றது. இதனைத் திருவாசகம் பலவிடங் களில் கூறுகின்றது.

'தேனேயு மலர்க்கொன்றை' என்றும், தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார்' என்றும், 'கொங்குலவு கொன்றைச் சடையான்' என்றும், 'தேனார் சடை முடியான்', 'தேன்பாய் மலர்க்கொன்றை மன்னும், தேனக மாமலர்க் கொன்றைபாடி' என்றும் போற்றுகிறார். இவ்வண்ணம் கொங்குலவு கொன் றைச் சடைமுடியை மணிவாசகர் ஏத்துகின்றார்.

---

9. திருப்பொற்சுண்ணம்.
20. திருப்பள்ளியெழுச்சி.

திருவாசகத்தேன் :

"திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்ற முதுமொழி திருவாசகத்தின் பெருமையை உணர்த்துகின்றது. திருவாசகம் சிவபெருமானைத் தெளிவந்த தேறலாகக் காட்டுகின்றது என்று கூறினுல் மிகையாகாது. பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும், பெண்சுமந்த பாகத்தனின் வான்கருணையை தானே வந்து தலையளித்தாட்கொண்டருளும் வான்வார் கழல்களைப் போற்றுகின்ருர். தேனமுதான சிவபெருமான் புகழ்கூறுந் திருவாசகத்தை இதனுல்தான் 'திருவாசகமென்னுந் தேன்' என்று அறிஞருலகம் போற்றி வணங்குகின்றது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam,

Vaithiswarankoil.

My wife daughter and myself visited the most beautiful and famous temple of Vaithiswara and we were very impressed with the maintenance of the temple and the beautiful images.

We were shown round by the authorities of Dharmapuram Adhinam who took considerable amount of interest in explaining everything about the temple.

[Sd) Kandappa Durai,

24—1—61.

Retd. General Manager, S. I. Ry.

அவன் செயல்!*

செஞ்சோற்கோண்டல்

வித்துவான். சொ. சிங்காரவேலன், B. A.

வாழ்க்கை வயலினில் விதைகளை வித்தி
வாழ்பவர் நாமெல் லாம்! - நம்மை
வீழ்ந்துவி டாமல் கருணையி னாலே
விரும்புவன் இறையவனே! 1

வித்திய வித்துகள் பழுது படாமல்
வேலியும் அவனு வான்! - எங்கும்
ஒத்துநி றைந்தே ஒவ்வொரு நெஞ்சிலும்
ஒளிநடம் அவனுவான்! 2

மாரியில் பனியை மண்ணுல கிற்கே
மலிந்திடச் செய்திடு வான்! - நீல
வாரியின் புனலை வண்மழை யாக்கி
வழங்குவன் முழங்குவனே! 3

பகலவன் வெயிலும் பால்மதி நிலவும்
பாரில் அவனரு ளே! - இங்கு
நிகரிலை யந்த நீள்கரு ணைக்கே;
நெஞ்சினில் எண்ணுவையே! 4

அண்மையில் சேய்மையி லாகிடும் பொருள்களை
ஆக்குவன் அவனன் றோ? - நல்ல
தண்மையில் மணத்திற் சிறந்திடு மலர்களைத்
தருபவன் அவனன் றோ? 5

---

* JANE CAMPBELL என்ற கவிஞர் எழுதிய (God Made all Things) பாடல்களைத் தழுவியது.

நறுமலர் கட்கே மணந்தரு மெங்கள்
நாதனும் அவனன்றோ ? - வானில்
மருவிடும் விண்மீன் தமக்கொளி நல்கிடும்
மாண்பினன் அவனன்றோ ? 6

காற்றும் அலையும் அவனது கட்டளை
காதலிற் கொள்வனவே ! - இங்கு
நேற்றும் இன்றும் நாளையும் நம்மை
நிகழ்த்துவன் அவனன்றோ ! 7

நாமவன் சேய்கள் ; வாழ்ந்திடல் அவனது
நல்லருள் வளமன்றோ ? - இந்தப்
பூமியிலந்தப் புனிதன் திருவடி
போற்றுதல் கடனன்றோ ! 8

எல்லா உலகும் எழுந்தினி தோங்கிட
இருப்பவன் இறையவனும் - நமது
பொல்லாங் கதனைப் புறம்பட ஓட்டிப்
பொன்னொளி செய்பவனும் ! 9

எல்லா உயிர்க்கும் அன்பினைக் காட்டும்
ஏற்ற மிகுந்தவனும் ! - கல்வி
கல்லாத வர்க்கும் கற்றவர்க்கும் மருள்
காட்டும் கதிரவனும் ! 10

பேருல கிதனைப் பேரரு ளாலே
பிறங்கிடப் படைத்தவனும் ! - புகழ்
கூறுவ தென்றால் முற்றவும் கூறிக்
குறித்திட இயலாதே ! 11

வாழியென் றிறைவன் திருவடி வாழ்த்தி
வையத்து வாழ்ந்திடுதல் - அன்றிச்
சூழ்கடற் புவியில் வேறிலை நமக்குச்
சொற்றுணை நற்றுணையே ! 12

* "மனக்கோயில்" *

வித்துவான், ம. சிவசம்பு

(மலர் 20, இதழ் 4, பக்கம் 229இன் தொடர்ச்சி)

காட்சி 6

இடம் : திருநின்றவூர் வீதி

பாத்திரங்கள் : ஊரவர் சிலர் ; பூசலார்

காட்சி விளக்கம்

[பூசலார் பொருள் தேட முயற்சித்தல் - ஊரவர் இகழ்தல் - இராசசிம்மன் கோயில் கட்டுவதை அறிதல் - அரசன் செய்யும் தர்மங்களைப்பற்றி புகழ்ந்து கூறுதல்]

ஊரவர் 1.

(கிராமியப்பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டு வருகிறார்)

இன்பம் வருகுது துன்பம் தொலையுது - இதை
எல்லோரும் உணர்ந்திட வேண்டும்
அன்பு பெருகுது வன்பு தொலையுது - இதை
எல்லோரும் அறிந்திட வேண்டும்
பக்தி வளருது பாவம் தொலையுது - இதை
எல்லோரும் புரிந்திட வேண்டும்
சக்தி வளருது சாபம் தொலையுது - இதை
சாக்கியர் சிந்திக்க வேண்டும்
கலைக் கோயில் வளருது கவலை தொலையுது - இதை
கயவர்கள் கருதிட வேண்டும்
மனக் கோயில் வளருது மடமை அழியுது - இதை
மக்கள் அறிந்திட வேண்டும்.

ஊரவர் 2 : என்ன அண்ணே ! பாட்டும் கும்மாளமும் அதிக மாக இருக்கு. என்ன செய்தி.

ஊரவர் 1 : தெரியாதா உனக்கு, எனக்கு வேலை கிடைத்து விட்டது.

ஊரவர் 2 : என்ன வேலை? எங்கே அண்ணே? எனக்கும் வேலை வாங்கித் தரமாட்டாயா ?

ஊரவர் 2 : தம்பி ! கவலைப்படாதே ! நம் அரசர் இராசசிம்மன் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கவும், நாட்டில் பஞ்சத்தைப் போக்கவும், தன் கலை ஆர்வத்தையும் பக்தி மார்க்கத்தையும் நிலைநாட்ட ஒரு திட்டம் வகுத்திருக்கிறார். அத்திட்டத்தின்படி கயிலாசநாதருக்குக் கோயில் கட்ட ஆரம்பித்திருக்கிறார். நேற்றுத்தான் தொடக்கவிழா.

ஊரவர் 3 : என்ன நடந்தது. எப்படி நடந்தது ! கொஞ்சம் சொல்லு அண்ணே !

ஊரவர் 1 : அரசரே அஸ்திரவாரக்கல் நாட்டினார். புலவர் தண்டி கூட இருந்து காரியங்களை நடத்திவைத்தார். அஸ்திவாரக்கல்நாட்டு முடிந்தது. அரசரே பேசினார்.

ஊரவர் 2 : அரசர் பேசினாரா ?

ஊரவர் 1 : ஆம் அண்ணே ! அரசரே பேசினார். "நம் துன்பம் துடைப்பவன், துயர் துடைப்பவன் இறைவன் ஒருவனே. நம் கவலையெல்லாம் போக்குகிறவன் அந்தக் கயிலை நாதனே. அவனுக்கு ஒரு கலைக்கோயில் எடுக்கவேண்டும் என்று ஆசை. அந்த ஆசையை இன்றுதான் எல்லோரும் அறியும்படியாகக் கூறுகிறேன். என் மனத்தில் எழுந் திருக்கும் மனக் கோயிலை, பலரும் அறியக் கலைக்கோயி லாகக் கட்டத் திட்டமிட்டிருக்கிறேன். இக் கலைக்கோயிலை எழுப்புவதன்மூலம் பல்லவநாடு பாரில் ஓங்கும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் பஞ்சம் பசி பறந்திடும். வேலையில்லாத் திண்டாட்டம் தொலையும். எல்லோரும் ஒத்துழைத்து இப் பணியைச் செய்து முடிக்க வேண்டுகிறேன்..."

ஊரவர் 3 : என்ன அண்ணே அரசர் மாதிரியே பேச ஆரம்பிச்சுட்டே !

ஊரவர் 2 : ஆரம்பிய்க்க - அவர் என்ன குரங்கா !

ஊரவர் 1 : தம்பி இன்னும் உன் குரங்குப்புத்தி உன்னைவிட்டுப் போகல்ல பார்த்தாயா ?

ஊரவர் 3 : இன்னும் என்ன நடந்தது.

ஊரவர் 1 : பேச்சு முடிந்தது. எல்லோருக்கும் பட்டும், பட்டாடையும் பணமும் தானம் கொடுத்தார் அரசர். புலவர் தண்டிக்குப் பொன்னுடை போர்த்தி மரியாதை செய்தார். பின் அவர் பேசினார். அதன்பின் முதல் மந்திரி பேசினார். அவர்தான் வேலையில்லாதவர்கள் இன்றுமுதல் இங்கேயே வேலை செய்யலாம் என்று சொன்னார்.

ஊரவர் 2 : அதோ ! பூசலார் வருகிறாரே (பூசலார் வருதல்)

ஊரவர் 1 : வாருங்கள் ஐயா ! வணக்கம். என் முகம் வாட்டமுடன் காணப்படுகிறீர் !

பூசலார் : ஒன்றும் இல்லை அப்பா. நாம் நம் ஊரில் ஒருகோயில் இல்லையே, கோயில் கட்டலாம் என்று பலரிடமும் சொன்னேன். எல்லோரும் சேர்ந்து என்னை இகழ்கிறார்கள்.

ஊரவர் 2 : 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று ஔவைப்பாட்டியும் சொல்லி இருக்கிறார். நம் ஊரில் கோயில் கட்டுவது அவசியம்தான் ஐயா.

ஊரவர் 3 : 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று - காலையில் எழு - கடவுளைத்தொழு' என்று படிச்ச பாடத்தை எல்லாம் ஒப்புவித்தால் போதுமா? உண்டானகோயிலைக் காப்பாற்ற முடியுதா ? எத்தனையோ கோயில் பாழ் அடைந்து கிடக்கிறது. வவ்வாலும் - நாயும் - பேயும் அடையுது. அதைச் சீர்திருத்த முடியல்லே - புதிய கோயில் கட்டுகிறாராம் - கோயில் ஏன் ஐயா ! பூசலாரே ! உனக்கு வேறுவேலை இல்லே. சாப்பாட்டுக்கே வழியில்லை, கோயில்வேறு கோயில் ...

ஊரவர் 1 : ஏண்டா ! எண்ணெய்ச் சட்டியிலே போட்ட கடுகு மாதிரி படபடண்ணு பொரியரே. பெரியவர் ஆசையைச் சொன்னர். உன்னுல் உதவ முடிந்தால் உதவி செய், அல்லது சும்மா இரு.

ஊரவர் 2 : நம் அரசர் கூடக் காஞ்சிபுரத்தில் கயிலாசநாத ருக்கு ஒரு கோயில் கட்ட ஆரம்பித்திருக்கிருர்.

பூசலார் : அப்படியா, நல்லதப்பா ! நல்ல செய்தி சொன்னுய்.

ஊரவர்கள் : நாங்கள் வரங்கோ.

பூசலார் : (தனிமையில்)

இறைவா ! இனி நான் என்செய்வேன். பணம் கேட்டால் பலரும் இகழ்கிருர்கள் " வேண்டுவார் வேண்டுவதே கொடுப் பவன் நீ. வேண்டத் தக்கதும் அறிவோய் நீ. என மனத்துள் நின்று என் கருத்து அறிந்து முடிப்பவன் நீ. மதியணிந்த பெருமானே ! இன்றே என் மனக்கோயிலைக் கட்டத் தொடங்கு கிறேன்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்ருன் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்ற என்
தாயானைத் தவமாய தன்மையானைத்
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருஆலவாய்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. "

(தொடரும்)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், சே. செல்வப்ப முதலியார்

மேகத்தை யொப்பவர் கைம்மாறெண்ணுது மிகத்தருவோர்
காகத்தை யொப்பவர் கண்டதைச் சிந்தையிற் காமுறுவோர்
பேகத்தை யொப்பவர் வீணவார்த்தை பிதற்றிடுவோர்
நாகத்தை யொப்பவர் நன்றிகொன் ருேரறி நன்னுதலே, 79

சவுந்தரியந்தாதி

பவளக்கொடி அடிகள்

(மலர் 20, இதழ் 4, பக்கம் 232 இன் தொடர்ச்சி)

ஏழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கதியைப் பாரிது புதுமைக் காகிய
கடவுட் போதனை காணின்றே
பதியைப் பாரிது விகிதம் பாதொரு
பயனைக் கூறிய பரஞானம்
போதியப் பாரிரு வினையற் றோடிய
பொடியைத் தூவிநீ யழையாயே
நதியைப் பாதிமின் மதியைச் சூடிய
நடனத் தாரிட முடையாளே. 82

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

உடையாளை மடமயிலை யுவமை யில்லா
வுருவாளை யாவருக்கு முயர்ந்த தாயைச்
சடையாளை முட்கோண சட்கோ ணத்துத்
தந்திரியை மந்திரியைச் சவ்வை யவ்வைக்
கோடையாளை யெங்கெங்கு முருவ மாகிக்
கூறுகிலி யுங்கலந்த குமரி வாழ்வை
விடையாளைப் பரஞ்சோதி யடியைப் போற்ற
வினையேனுக் கென்பயனோ விதித்த வாறே. 83

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

வாறேன்றி னுலுமினி மாருது சிவஞான
வழிமருந் தாலெ னதுநோய்
மாறியிடு மம்மையுன் றிருவடிக் கல்லாது
மற்றோரு வருக்கு மோதேன்

சேரு்ன்று தசைகுருதி நிணமூளை புழுமலத்
திரல்வைத்த சடவ லையிலே
சிக்கிக் கிடந்தலறி நெக்கிட்டி ருந்தகளை
தீராத பழியு னக்கே
மாருன்றி னடியுலக மெங்குமுற வேற்ற சிவன்
மனதுக் கிசைந்த மணியே
மங்கையுமை சங்கரிம ணேன்மணியே னைப்பெற்ற
மாதா மயானத் தியே
கூடருன்று மிருவினைப் பேயொழிய நானென்ற
குற்ற மும்பற் றற்றிடக்
குறைபட்ட குடநிறைந் தெப்படி யிருந்ததக்
கோள்கை யைப்போ லருளுமே. 84

கலிவிருத்தம்

அருளுக்கொரு கடலேவினை யடவிக்கொரு கனலே
யிருளுக்கொரு பகலேயென திதயத்தொரு முதலே
வெருளுக்கொரு தெருளேசிவ விளைவுக்கொரு வயலே
பொருளுக்கொரு பொருளேதுணை யுமையைப்புக ழியல்பே. 85

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

இயலிசை யுணரே னினியவை புகழே
னிருபத நினையே னெனையாள்வாய்
செயலவை தெறியேன் செனனமு மறியேன்
சிதரிட லறியேன் சிறியேனே
மயலினை முனியேன் வறிஞர்க டலையேன்
மனமொரு வழியே மறிகில்லே
னயவிலை யரசே யரிவையர் சிரசே
யரனிட மிறைசே ரமுதாளே. 86

(தொடரும்)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

யார்க்கை யில்லார் விழியில்லாத வந்தகர் பாரினிலே
பேர்க்கை யில்லார் மொழிதப்பாத தூயவர் பேருடலில்
வேர்க்கை யில்லார் குளிர்நோயுற்ற மாந்தர் விலங்கினத்துஞ்
சேர்க்கை யில்லார் வுண்ட வீட்டிற் கிரண்டகஞ் செய்தவரே. 80

செய்திகள்

ஆதீன தேவஸ்தானங்களில் பங்குனித்திங்கட்பெருவிழா

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனித்திங்கள் 9ஆம் நாள் தொடங்கி (22-3-61, 31-3-61) 18ஆம் நாள் முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் பங்குனித்திங்கட் பெருவிழா நடைபெற்றது. விழாநாட்களில் பிரசார சபாமண்டபத்தில் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்குத் தொடங்கி சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசை நிகழ்ச்சிகளும், கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன.

26—3—61 ஞாயிற்றுக்கிழமையன்று திருமுறைவிழாவும் தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் நடைபெற்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர், வித்துவான், G. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும், திருமுறைபற்றிய விரிவுரை நிகழ்த்தினார்கள். அன்று தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன. யானைமேல் திருமுறைகள் ஒப்பனை செய்யப்பெற்று, பண்ணிசைவாணர்களின் திருமுறைப்பாராயணத்தோடு திருவீதிவலமாகக் கொணரப்பெற்றன.

திருபுவனத்தில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயிலில் சார்வரி ஆண்டு பங்குனித் திங்கள் 9 ஆம் நாள் தொடங்கி 18ஆம் நாள் முடிய (22-3-61, 31-3-61) உள்ள நாட்களில் பங்குனித்திங்கட் பெருவிழா மிக்க

சிறப்புடன் நடைபெற்றது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசை நிகழ்ச்சிகளும், கதாகாலக்ஷேபமும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் கேட்டுமகிழ்ந்தனர்.

27—3—61 திங்கட்கிழமையன்று திருமுறை விழாவும் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும், நடைபெற்றன. அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் வித்துவான், சே. வேங்கடராமச் செட்டியார் அவர்களும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் திருமுறைபற்றிய விரிவுரை நிகழ்த்தினுர்கள். திருமுறை வகுப்பு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பெற்றன. பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு திருமுறைகள் யானைமேல் ஒப்பனை செய்யப்பெற்று வீதிவலமாகக் கொணரப்பெற்றன.

பேரளத்தில்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் சார்வரி ஆண்டு பங்குனித்திங்கள் 9ஆம் நாள் தொடங்கி (22—3—61, 31—3—61) 18ஆம் நாள் முடிய உள்ள நாட்களில் பங்குனித்திங்கட் பெருவிழா மிக்கசிறப்புடன் நிகழ்ந்தது. விழா நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சியும், கதாகாலக்ஷேபமும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

சீகாழியில்:

திருஞானசம்பந்தர் அபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 24-3-61 வெள்ளிக்கிழமை திருஞானசம்பந்த சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இரவு திருமுறைப் பாராயணத்தோடு திருஞானசம்பந்தர் புறப்பாடும் நிகழ்ந்தது.

அன்று திருஞானசம்பந்தசுவாமி திருக்கோயிலில் தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் செஞ்சொற் கொண்டல் வித்துவான், சோ. சிங்காரவேலன் B. A., அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் திரளாகக்கூடி வழி பட்டும், கேட்டும் உய்ந்தனர்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

திருத்தணி, திருவெண்பாக்கத்தில் மாதாந்தர வழிபாடு

சென்னை, தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 5—3—61 ஞாயிறு காலை திருத்தணியிலும், மாலை திருவேண்பாக்கத்திலும், சிறப்பாக நடைபெற்றது. திருத்தணியில் தேவஸ்தான நிர்வாக அதிகாரியும், சிவாச்சாரியர் களும் குழுவினரை வரவேற்று உபசரித்து உடனிருந்து நல்ல முறையில் வழிபாடு செய்துவைத்தனர். வழிபாட்டுக் குழுவினர் முருகப்பெருமானுக்குப் பால் அபிஷேகம் செய்து தரிசித்தனர், நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன் அவர்கள் திருத்தணித் திருப்புகழ், முருகன் பிள்ளைத்தமிழ் முதலிய துதிப்பாடல்களை உளமுருகப் பாடினார். வழிபாட்டின் பிறகு தேவஸ்தான முன் மண்டபத்தில் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. நல். முருகேச முதலியாரவர்கள் திருப் புகழ்ப் பாடல்களின் எளிமையையும் அவற்றுள் காணப்படும் தத்துவக் கருத்துக்களையும் சிறப்பித்துப் பேசினார். திரு. க. வச்சிரவேல் முதலியாரவர்கள் முருகப்பெருமான் அவதார காரணத்தையும், அப்பெருமான் குன்றுதோறும் எழுந்தருளி அருள் வழங்கும் சிறப்பினையும், திருத்தணிக் குன்றின் சிறப் பினையும் விளக்கிப்பேசினார். சுவாமிகள் தமது தலைமையுரையில் தணிகைப் பெருமானுக்கு இடதுபக்கமுள்ள சிவலிங்கமூர்த்தி குமாரஈசர் என அழைக்கப்படுகிறார் என்றும், அதற்குக் குமார னால் பூசிக்கப்பட்டவர் என்பதுதான் உண்மையான பொருள் என்றும், குமாரப்பெருமானை தந்தையாகிய சிவபெருமான் பூசித்தார் எனக்கூறல் பொருந்தாக்கூற்று என்றும், சிவனார்

மனங்குளிர முருகப்பெருமான் உபதேசம் செய்ததும், பரமேசுவரன், பார்வதிதேவிக்கு உபதேசிக்கும்போது இடையில் இருந்த கந்தப்பெருமான் கேட்டு, அதைத்தான் உபதேசித்தாரே தவிர பரமேசுவரனுக்குத் தெரியாத ஒன்றை உபதேசித்தாரல்லர் என்றும் முன்னவர்கள் சென்ற வழியைப் பின்பற்றியே வழிபட்டால் இக்கருத்துக்கள் ஒவ்வொருவருக்கும் நன்கு புலனுகும் என்றும் குறிப்பிட்டார்கள்.

நண்பகலில் பூண்டியிலுள்ள யாத்ரிகர் விடுதிக்குக் குழுவினர் சென்றனர். குழுவினரை மேயர்கம்பெனி ஆர். மாசிலாமணி முதலியார், கைவண்டூர் இராஜு முதலியார், சினிமா டைரேக்டர் சோமு, காண்ட்ராக்ட். செல்வராஜ் முதலியார் ஆகியோர் வரவேற்று மாகேசுவரபூஜை செய்துவைத்தும், மாலை சிற்றுண்டி அளித்தும் உபசரித்தனர். மாலை 3 மணிக்கு விடுதியில் சமயப் பிரசாரக்கூட்டம் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. திரு. என். ஆர். முருகவேள் அவர்கள் '' திருவெண்பாக்கத் தேவாரம் '' என்பது பற்றியும், திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் '' திருக்கோயில்களின் தற்காலநிலை '' என்பது பற்றியும் சிறந்த முறையில் விரிவுரை நிகழ்த்தினார்கள். சுவாமிகள் தமது தலைமையுரையில் பலதரப்பட்ட கோயில்களிலும் சென்று வழிபட்டுவருவதால் குழுவினர்க்கு ஏற்படும் நன்மைகளை எடுத்துக்காட்டிப் பேசினார்கள். ஓரளவு சமயத்துறையில் ஈடுபடக்கூடியவர்கள் இப்படிப் பல கோயில்களுக்குச் சென்று வழிபட்டால் சமயத்துறையில் அதிகம் ஈடுபடுவார்கள் என்பதை நம்மில் பலரும் ஒப்புக்கொள்ளுவோம் என்று கூறினார்கள். திரு. சிவகுமாரன் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். பூண்டி நீர்த்தேக்கப் பிரதம இஞ்சினீயர் உள்பட பல பெருமக்களும், போது மக்களும் விரிவுரை கேட்டு மகிழ்ந்தனர். 7 மணிக்குத் திருவுளம்பூதூரில் பாலாலயம் செய்துவைக்கப் பெற்றுள்ள திருவெண்பாக்கம் கோவிலுக்குச் சென்று அத்தலத் தேவாரப் பதிகத்தினை திரு. சுவாமிநாதன் பக்தியுடன் ஓத இறைவழிபாடு சிறப்பாக நடைபெற்றது. ஊர்ப்பொதுமக்கள் பலரும் வழிபாட்டில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

எதிர்காலம் ☞ கே. முத்துஜோதிடர்

(பிலவஹு சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)

(13—4—61 முதல் 13—5—61 முடிய)

பிலவவருஷம் சித்திரைமாதம் முதல்தேதி குருவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் பகல்நாழி 17-36 விநாடிக்கு கடகு லக்னத்தில் குருகால ஹோரையில் மேஷராசியில் வருஷப்பிரவேசமாக சூரியன் பிரவேசித்து சகல லோகத்துக்கும் மங்களம் உண்டாக்குவாராக. வருஷப்ரவேச லக்ன பலத்தால் நாடேங்கும் செழித்து சுபிட்சமாக சகல ப்ரஜை களும் நித்யமங்களத்தை அடையுமாறு சர்வேசுவரன் அருள் புரிவாராக. சுபம்.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுப சந்தோஷத்தையும் நித்ய மங்களத்தையும் தனதான்ய லாபத்தையும் ஆரோக்யத்தையும் தந்து கிரஹ சுகத்தைப் பூர்ணமாய் அனுபவிக்கத்தரும். புதன், வியாழன் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

விருஷபராசி 9 பாதங்களும் ஜேயத்தைத் தந்து நஷ்டமான பொருளேயும் வாங்கிக்கொடுத்து உத்யோகலாபம், கீர்த்திபத்ரம், சர்வஜனங்களுடைய அனுகூலம், வித்யாவிருத்தி முதலிய சுபங்களைத் தரும். குடும்பத்தில் விவாஹாதி சுபங்களைத் தந்து சந்தோஷத்தை உண்டுபண்ணும். புதன், வேள்ளி சுப மாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தையும், உத்யோக லாபத்தையும் இடம் மாறலேயும் மேல்பதவிகளேயும் எங்கும்

நிறைந்த கீர்த்தியையும் தரும். அசாத்தியமான காரியமெல்லாம் சுலபமாய் சாதிக்கமுடியும். வித்யாவிருத்தியாகும். நூதன வியாபார விருத்தியும் ஏற்படும். சத்ருக்கள் சரண் அடைவார் கள். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் நான்காம் பாதமும் பூசம் நான்கு பாதங்களும் வித்யாவிருத்தியையும் உத்தியோகத்தில் உயர்பதவியையும் நல்ல மேதையையும் தரும். ஆயில்யம் நான்கு பாதங்களும் வியவஹார வெற்றியையும் நஷ்டமான பொருள் வரத்தையும் தொழில் மேன்மையையும் நூதன வியாபாரப் பெருக்கத்தையும் தெய்வ பலத்தையும் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுப மாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வையும் குடும்ப சுகத்தையும், சுபசோபனுதிகளையும் தரும். பூரம் நான்கு பாதங் களும் வரவுக்கு மிஞ்சின செலவையும் குடும்பத்தொல்லைகளையும் விரோதங்களையும் உண்டுபண்ணும். உத்திரம் முதல்பாதம் ஆரோக்யம் தரும். தொழில் ஓங்கச்செய்யும். நல்லோர் பெரி யோர்களின் அன்பு கிட்டும். மனம் சந்தோஷம் அடையும். புதன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களையும் அதிகத் தொல்லைகளையும் தரும். செய்காரியங்கள் விக்னமடையும். ஹஸ்தம் முதல் பாதம் ஸஞ்சார பலனைத் தரும். ஆரோக்யக் குறைவு காட்டும், மனம் நிம்மதி இருக்காது. ஹஸ்தம் 2, 3, 4, பாதங்கள் அடிக்கடி ஸஞ்சார பலன்களையும் புத்திக்கு ஸஞ்சலத் தையும் காரிய விக்னங்களையும் தரும். ஆனுலும் தெய்வீகத் தன்மையால் காலோசிதமான விசேஷ புத்தியையும், மேலோர் பெரியோர் நட்பையும் உண்டுபண்ணும். அடிக்கடி மத்ய காலங்களில் ஈதிபாதைகளால் தொல்லைவிளைவிக்கும். தெய்வம்

முன்நின்று காக்கும். சித்திரை 1, 2 பாதங்கள் ஸதா குழப்பத்தைத் தரும், ஸ்திரபுத்தி ஏற்படாது. புத்திராதிகளால் சுகம் உண்டாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சுபமிராது. கவலையைத்தரும். காரியங்கள் விக்னமடையும். சுவாதி நான்கு பாதங்களும் விசாகம் மூன்று பாதங்களும் சுபத்தைத் தரும். சத்ருக்களை சரண் அடையச்செய்யும். எங்கும் கீர்த்தி ஓங்கும். ஸதா தெய்வ சிந்தனையே ஏற்படும். அஸாத்யமேல்லாம் சுலப ஸாத்யமாகும் விக்னங்கள் நீங்கும். ஆரோக்யமுண்டாகும். சனி, சேவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விசாகம் நான்காம்பாதம் சுபமாய் இராது. ஆரோக்யக் குறைவும் தன நஷ்டமும் ஏற்படும். அபவாதம் ஏற்படச் செய்யும். அனுஷம் நான்கு பாதங்களும், கேட்டை நான்கு பாதங்களும், ஸஞ்சார பலன்களையும், குடும்பத் தொல்லைகளையும் உண்டுபண்ணும். ஆனுலும் தொழில் விருத்தி உத்தியோக லாபம் பெரியோர்களின் சேர்க்கை சாச்வதமான ஸ்திரசர காரியங்கள் சாதனம் இவைகளைத் தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் தொல்லையோடு காலம் ஓடும். மனம் நிம்மதி இராது. பூராடம் நான்கு பாதங்களும் இடம்மாறி சுகவாழ்வையும் உத்தியோக மேன்மையையும் தரும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். நூதன கிரஹலாபங்களையும் ஸந்தோஷத்தையும் தரும். உத்திராடம் முதல் பாதம் ஆரோக்யம் உண்டுபண்ணும் கடன் தொல்லை நீங்கும், நூதனகிரஹ சுகவாஸம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் விசேஷ ஸௌக்யத்தையும் தார புத்திர சுகங்களையும் நூதன உத்தியோக லாபத்தையும், கீர்த்தியையும் மேலோர் அன்பையும் தரும். ஆரோக்யம் உண்டாகும். எதிர்பாராத சில தனலாபங்கள் ஏற்படச்செய்யும். புதன் வெள்ளி சுபமாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் இடம்மாறி சுபம் உண்டுபண்ணும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளையும், பந்து கல்யாண விபவங்களையும் தரும். சதயம் நான்கு பாதங்களும் பூரட்டாதி மூன்று பாதங்களும் இருப்பிடத்திலேயே பெரும் லாபத்தையும் தொழில் பெருக்கத்தையும் தரும். சற்று ஆரோக்யக்குறைவு மாத்திரம் உண்டுபண்ணும். குடும்பம் தழைத்து ஓங்கும். இல்லறசுகம் பூர்ணமாகும். புதன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் சுபமிராது. வீண் அலைச்சல்களையும், தொல்லைகளையும். அதிக செலவினங்களையும் தரும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும், ரேவதி நான்கு பாதங்களும் நினைத்ததெல்லாம் கைகூடச்செய்யும். விசேஷ லாபம் உண்டு பண்ணும். ஆரோக்யத்தைத் தரும். குடும்ப சுகம் ஓங்கும். மேலோர் பெரியோர் அன்பு கிட்டும். தெய்வம் முன்னிற்கும். காரியசித்தியாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு: மேற்படி மாதபலன் சுபங்களை எதிர்பார்க்கும்படி ஆகும். இயற்கைக்கோளாறுகள் பலதினுசாக உலகங்களில் பரவச் செய்யும். ஸாது ஜனங்களின் மஹாஜனங்களின் ஸத்ய, தர்ம, சௌச, ஆசார பரோபகார சிந்தனைகளால் எல்லா உத்பாதங்களும் மாறி உலகத்துக்கு க்ஷேமத்தைத் தரும்.

கடவுள் துணைபுரிவாராக.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாகி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றதலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும் வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குரு பீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு நிகழும் பிலவ ஆண்டு வைகாசித்திங்கள் 13-ஆவது நாள் (26—5—61) வெள்ளிக்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும். திருநாட்களில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமபுர ஆதீனம்
கார்பார்,
சொக்கநாதத் தம்பிரான்.

தருமை ஆதீன மடாலயம்,
பிலவ - சித்திரை 28

ஆதீன மடாலயத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நாள்தோறும் மாலை 6-மணிமுதல் நடைபெறும். நாள்தோறும் காலையில் சைவசித்தாந்த வகுப்பு (சிவஞானசித்தியார் பாடம்) நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயனுறுக.

திருநாள் விபரம்

தமிழ் ஞல மீ உ	இங்கிலீஷ் உ மீ ஞல	வாரம்	திரு நாள்	உற்சவ விபரம்
ஸ்ரீ வைகாசி 12	25—5—61	குருவாரம்		ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 25-நாழிகைக்குமேல் 30-நாழிகைக்குள் துலா லக்னத்தில் அனுக்ஞை, விக்நேசுவர பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்.
13	26—5—61	சுக்கிரவாரம்	1	ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி $9\frac{1}{4}$-நாழிகைக்குமேல் $10\frac{1}{2}$-நாழிகைக்குள் கடக லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மஹோத்ஸவ துவஜாரோஹணம்.
14	27—5—61	ஸ்திரவாரம்	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
15	28—5—61	பானுவாரம்	3	பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி.

16	29—5—61	சோமவாரம்	4	நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி.
17	30—5—61	மங்களவாரம்	5	சகோபுர ரிஷப வாகனக் காட்சி.
18	31—5—61	புதவாரம்	6	யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி.
19	1—6—61	குருவாரம்	7	திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமானம். வெள்ளி ரதக்காட்சி.
20	2—6—61	சுக்கிரவாரம்	8	குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி.
21	3—6—61	ஸ்திரவாரம்	9	உதயத்திற்குமுன் மணி 5-க்குமேல் 6-க்குள் ரிஷ லக்னத்தில் மகாரதாரோகணம். திருத்தேர்.
22	4—6—61	பானுவாரம்	10	காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தங் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங்கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம்.
23	5—6—61	சோமவாரம்		மௌன உற்சவம்.
24	6—6—61	மங்களவாரம்		சண்டேசுரர் உற்சவம்.

உ

சிவமயம்

சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்த மாகி எங்கும்
சேறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த ஞதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமபுர ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்தசரணாலயர்)

4—6—61 ஞாயிற்றுக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா

5—6—61 திங்கட்கிழமை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்

பட்டணப்பிரவேசம்